# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஆகஸ்ட் 09 இதழ் - 74










**காஷ்மீர் -- எந்த தருணத்திலும் வெடிக்கக்கூடிய ஒரு எரிமலை?**

பக்கம் - 03



**எழுக தமிழின் அரசியல்**

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ....

பக்கம் - 05



**ஹிஸ்புல்லாவிடம் கற்க வேண்டியவை...**

இலங்கை முஸ்லிம்களின் அடையாளம் காத்தான்குடி...

பக்கம் -03



**பலவீனமானவர்கள் பலமாக மோதும் தேர்தல் களம்...**

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதத்தில்

பக்கம் -06



## மட்டக்களப்பில் வறட்சியால் 25,000 குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மக்களுக்கு குடிநீர் வழங்குவது மற்றும் நீர்ப்பாசன நிலங்களுக்கான நீரைப் பகிர்வது ஆகிய விடயங்களில் மாவட்ட நிர்வாகம் பெரும் சிரமத்தைச் சந்தித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்க அதிபர் மா. உதயகுமார் தலைமையில் வறட்சிச் சூழலை முகாமைத்துவம்

தொடர்ச்சி பக்கம்...15


## 'கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு'

கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் வஜிர அபேவர்த்தன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி பக்கம்.. 10

## டெங்கு நோயாளர்களுக்கு அஸ்பிறின், இஸ்ரிரொயிட் மருந்துகளை கொடுக்க வேண்டாம் - சுகாதார அமைச்சு



டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருந்துகளை வழங்கும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்,

தொடர்ச்சி பக்கம்..10

## சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை ஏற்படுத்தக்கோரும் பிரேரணைக்கு காரைதீவு பிரதேசசபை பரிபூரண ஆதரவு!

### ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றம்



காரைதீவு நிருபர் சகா

பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட சாய்ந்தமருது மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்துவரும் சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபையை ஏற்படுத்தக்கோரும் பிரேரணைக்கு காரைதீவு பிரதேசசபை ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்து பிரேரணையை நிறைவேற்றியுள்ளது.

தொடர்ச்சி பக்கம்...02

## வாக்கெடுப்பு நடத்த தயங்கும் ரணில்

### சஜித் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் அழுத்தம்



நி. அமிர்தஸன்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரைத் தெரிவு செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழுவிலும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிலும் வாக்கெடுப்பு நடத்துமாறு கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாச கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளார்.

கட்சியின் மூத்த உறுப்பினர்களான சஜித், கரு ஜயசூரிய ஆகியோரிடையே ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கடும் போட்டி நிலவுகின்றது. ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்குமாறு வலிறுத்தி வருகின்றனர். கட்சியின் வேறு சில உறுப்பினர் சஜித் பிரேமதாசவை நியமிக்குமாறு வற்புறுத்தி வருகின்றனர். இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை திங்கட்கிழமை இரவு மூடிய அறையில் சந்தித்துப் பேசிய சஜித் பிரேமதாச, உறுப்பினர்களிடையே

தொடர்ச்சி பக்கம்...02




## மட்டக்களப்பில் தேசிய புத்திஜீவிகள் அமைப்பு அங்குராப்பணம்

(மட்/நிருபர் திரவரங்கன்)

கடந்த 03.08.2019 சனிக்கிழமை மட்/தேவநாயகம் மண்டபத்தில் சமாதான நீதவான் திரு.என்.சுந்தரேசன் தலைமையில் "தேசிய புத்திஜீவிகள் அமைப்பு" அங்குரார்பணக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கை இளம்கவிஞர் எழில்வண்ணன் தொகுத்து வழங்கினார். கருத்தரங்கில் பேச்சாளர்களாக களனி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சந்தன அபேரத்ன கலாநிதி விஜித்ரோஹன, அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முன்னாள் பேராசிரியர் யோகராஜா மற்றும் சட்டத்தரணி உபுல் குமரப்பெரும ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் சித்தாண்டி சபாரெத்தினம், பிரான்சிலிருந்து வந்த கிண்ணியடியைச் சேர்ந்த திருமதி.இன்பவல்லி, கலாபூசணம் இரா.தவராஜா ஆகியோருடன் இன்னும் பலர் உரையாற்றினார்கள்.

சுந்தரேசன் அவர்கள் தனது தலைமையுரையில் சாதி மத இன மொழிகளுக்கப்பால் நீதிகிடைக்காத பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி, அவர்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு முன் நிற்பதே தங்களின் முதற்கடமையென்றார். கருத்தரங்கு நிறைவேறிய பின் தாமரைக்கேணி செங்குந்தர் வீதியில் இதன் காரியாலயம் மிகலோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. சகலரும் தங்கள் சேவையை பெற்றுக் கொள்ள இக்காரியாலயத்தை நாடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 'மட்/சிறைச்சாலையை மாற்றுங்கள்' ராஜன் மயில்வாகனம் கோரிக்கை




(மட்/நிருபர்: திருவரங்கன்)

மட்டக்களப்பில் இதுவரை காலமும் செயற்பட்டு வரும் மட்டக்களப்புச் சிறைச்சாலையை சிறைச்சாலைக்கு சொந்தமான திருப்பெருந்துறையில் உள்ள காணியில் அமைக்குமாறும் தற்போது சிறைச்சாலை அமைந்துள்ள காணியை மட்/போதனா வைத்தியசாலைக்கு வழங்குமாறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்புத் தொகுதியமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் அவர்கள் நீதியமைச்சரும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருமான திருமதி. தலதா அத்துக்கோரள அவர்களிடம் விடுத்த வேண்டு கோளுக்கமைய இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சின் மேலதிக செயலாளருக்கு அமைச்சர் திருமதி. தலதா அத்துக்கோரளை பணிப்புரை வழங்கியுள்ளார்.

## பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனுடன் முதியோர் சங்கம் சந்திப்பு



(மட்/நிருபர்: திருவரங்கன்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டைமுனை கிராமசேவையாளர் பிரிவில் செயற்பட்டு வரும் கோட்டைமுனை சிரேஸ்ட பிரஜைகள் சங்கம் சென்ற 03.08.2019 சனிக்கிழமை மட்/மாவட்ட பிரதிநிதி எஸ்.வியாழேந்திரன் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளனர்.

அவ்வேளை அச்சங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலைக்கான நிதியுதவியைச் செய்து தருமாறு சங்கப் பிரதிநிதிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட திரு.எஸ்.வியாழேந்திரன் அவர்கள் இச்செயற்பாட்டை பாராட்டியதுடன் அக் கோரிக்கையில் மிகக்கூடிய கவனம் செலுத்துவதாக அச்சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ச்சி...

### வாக்கெடுப்பு நடத்த.......

வாக்கெடுப்பு நடத்துமாறு கோரியதாக ஐதேக வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் ரணில் விக்கிரமசவிங்க அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. எனினும் கட்சியில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாகவுள்ள உறுப்பினர்கள் பலர் வாக்கெடுப்பு நடத்துமாறு கோரி வருகின்றனர்.

வியாழக்கிழமை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த மூத்த உறுப்பினர்கள் சிலரும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்தியுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.தற்போது சபாநாயகராகப் பதவி வகிக்கும் 78 வயதான கரு ஜயசூரிய வயதில் மூத்தவராக இருந்தாலும் கட்சியில் சஜித் பிரேமதாசவைவிட இளையவர் என்று கட்சி உறுப்பினர்கள் பலர் கூறுகின்றனர். 1997 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கரு ஜயசூரிய 1999 ஆம் ஆண்டு மே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்திருந்தார்.பின்னர் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய தேசியக் கட்சியில் அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு 17 உறுப்பினர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று, மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். கரு ஜயசூரிய பிரபல தொழில் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்து–சைவ சமய மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை

இந்து–சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவையை தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சு நடத்தவுள்ளது.

முதற்கட்டமாக இம்மாதம் 10ம் திகதி வடகொழும்பிலும், 17ம் திகதி தென் கொழும்பிலும், 18ம் திகதி அவிசாவளையிலும் இந்தச் சேவை நடைபெறுவுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலும் உடனடியாக இந்த நடமாடும் சேவை நடத்தப்படும். இதில் இந்து குருமார்கள். அறங்காவலர்கள், அறநெறி ஆசிரியர்கள், இந்து மன்ற செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துக்கொண்டு பயன்பெற வேண்டும் என தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் கேட்டுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால், 'உதயம் - மக்கள் சேவை - உங்கள் ஊர் தேடி வரும் அரச சேவை' என்ற பெயரில் நடத்தப்படும் இந்த இந்து–சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை முதலில் கொழும்பு மாவட்டத்தில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இதையடுத்து ஏனைய மாவட்டங்களிலும் இந்த இந்து-சைவ நடமாடும் சேவை நடைபெறும். இவற்றுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அத்திவரதர் வைபவம்: அதிகரிக்கும் கூட்டம்



தமிழ்நாடு காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் காட்சியளிக்கும் அத்திவரதரைக் காண வரும் கூட்டம் தொடர்ந்து அதிகரித்துவருகிறது.

காஞ்சிபுரத்தில் அடுத்த வாரம் முழுக்க விடுமுறையாக இருக்கும் வகையில் உள்ளூர் விடுமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலிலுள்ள அனந்தசரஸ் குளத்தில் வைக்கப்பட்டிருக்கும் அத்திவரதரின் திருவுருவம் நாற்பதாண்டுகளுக்கு ஒரு முறை நீரிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டு பக்தர்களுக்குக் காட்சியளிப்பது வழக்கம்.1979ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஆண்டு அத்திவரதரை குளத்திலிருந்து வெளியில் எடுக்க முடிவுசெய்யப்பட்டது. அதன்படி, 27ஆம் தேதி இரவு - 28ஆம் தேதி அதிகாலையில் அனந்தசரஸ் குளத்திலிருந்து அத்திவரதரின் சிலை வெளியில் எடுக்கப்பட்டது.

இதற்காக குளத்தில் இருந்த நீர் முழுமையாக வெளியேற்றப்பட்டு, அருகில் இருந்த மற்றொரு குளத்தில் நிரப்பப்பட்டது. அத்திவரதரைக் காண்பதற்காக பக்தர்கள் ஆவலுடன் இருந்த நிலையில், ஒன்றாம் தேதியிலிருந்துதான் அவரை தரிசிக்க முடியுமென அறிவிக்கப்பட்டது. ஜுலை ஒன்றாம் தேதியிலிருந்து அத்திவரதர் வரதராஜப் பெருமாள் கோவிலின் வசந்த மண்டபத்தில் பக்தர்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்டார். குளத்திலிருந்து எடுக்கப்படும் அத்திவரதர் மொத்தம் 48 நாட்கள் பக்தர்களுக்குத் தரிசனம் தருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. 24 நாட்கள் சயன திருக்கோலத்திலும் 24 நாட்கள் நின்ற திருக்கோலத்திலும் காட்சி தருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி...

### சாய்ந்தமருது உள்ளூ.......

காரைதீவு பிரதேசசபையின் 18வது மாதாந்த அமர்வு நேற்று(8) வியாழக்கிழமை சபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை மாளிகைக்காடு சுயேச்சை அணியின் உறுப்பினர் அ.மு. பஸ்மீர் சபைக்கு விசேட பிரேரணையாக சமர்ப்பித்திருந்தார்.

அது தொடர்பாக உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு தவிசாளர் கோரியபோது, தமிழ் முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் சாதி, இன, மத பேதம் பாராது ஒருமனதாக ஏகோபித்த முறையில் ஆதரவளித்து தீர்மானத்தை நிறைவேற்றினர்.

அப்போது உறுப்பினர் பஸ்மீர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நாத்தழுதழுக்க அனைவருக்கும் நன்றி என்று கூறினார்.

முன்பதாக உபதவிசாளர் எ.எம்.ஜாகீர், உறுப்பினர்களான மு.காண்டீபன், எம்.றனீஸ் மற்றும் எ.ஜலீல் ஆகிய 4 உறுப்பினர்கள் சபையில் அனுமதிபெற்று தவிசாளரின் அனுமதியோடு வெளியே சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தவிசாளர் ஜெயசிறில் அங்கு அக்கருத்துக்கணிப்பை நிறைவுசெய்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபை நிச்சயம் அந்த மக்களுக்கு கிடைக்கவேண்டும். எமக்கருகிலுள்ள அந்த முஸ்லிம் சகோதரர்களின் கோரிக்கை நியாயமானது.

இதேபோன்று கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரமுயர்த்தும் பிரேரணையை உறுப்பினர் ஜெயராணி இச்சபையில் முன்வைத்தபோது முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் (உறுப்பினர் பஸ்மீரைத்தவிர) எதிர்த்து வாக்களித்தனர். பஸ்மீர் நடுநிலையாக வாக்களித்தார். அதற்கு பிரதியுபகாரமாக இன்று தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர் கொணர்ந்த சாய்ந்தமருதுபிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

பஸ்மீர் இன்று சபையில் ஆனந்தக்கண்ணீர் வடித்தார். அது எமது அனைவரது கண்களையும் நனையவைத்தது. இதுதான் தேவை. ஒரு இனத்தின் உணர்வுகளை மற்றைய இனம் புரிந்துகொள்ளவேண்டும். இந்த உறவுதான் தேவை.' என்றார்.

# காஷ்மீர் -- எந்த தருணத்திலும் வெடிக்கக்கூடிய ஒரு எரிமலை?




தன்னாதிக்கம் மிக்க மாநிலமான காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தில் இந்திய மத்திய அரசாங்கம் கை வைத்திருப்பது அந்த பிராந்தியம் குறித்த பேச்சுக்களை உலக செய்திகளில் மீண்டும் முன்னிடம் பிடிக்க வைத்திருக்கிறது.

சரத்துக்கள் 35ஏ மற்றும் 370 ஆகியவற்றை இந்திய நாடாளுமன்றம் ரத்துச் செய்துள்ளதால் தமக்கு இதுவரை காலம் இருந்த பல சிறப்பு உரிமைகளை ஜம்மு - காஷ்மீர் மக்கள் இழந்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி இதுவரை காலமும் ஒரு மாநில அந்தஸ்துடன் திகழ்ந்த காஷ்மீரை இரண்டாகப் பிரித்து ஜம்மு - காஷ்மீர் ஒரு பகுதியாகவும், லடாக் இன்னுமொரு பகுதியாகவும் ஆக்கி அவற்றை யூனியன் பிரதேசங்களாக டில்லியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்திய அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

ஏற்கனவே இருந்த இந்த சரத்துக்கள் மூலம் காஷ்மீர் மக்கள் தமது அரசாங்க நிறுவனங்களில் பதவிகளின் முன்னுரிமை, காணிகளை பிற மாநிலத்தவர் வாங்குவதற்கு தடை, போன்ற சிறப்பு அந்தஸ்துக்களை பெற்றிருந்தனர். ஆனால், அவை இப்போது நீக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் அனைத்து மாநில மக்களுக்கும் சம உரிமை வேண்டும், காஷ்மீருக்கு மாத்திரம் சிறப்பு அந்தஸ்து வழங்க முடியாது என்று காரணம் காட்டி இந்திய அரசாங்கம் இவற்றை ரத்துச் செய்துள்ளது. ஆனால், இவற்றை பொத்தம் பொதுவாக இப்படி மாத்திரம் பார்த்துவிடவும் முடியாது.

இந்தியப் பிரிவினையின் போது எல்லைப்புறங்களில் இருந்த பல சமஸ்தானங்களில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட பல, பாகிஸ்தானுடன் இணைய, காஷ்மீர் மாத்திரம் அப்படிச் செய்யவில்லை. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அந்த பிராந்தியம் ஒரு இந்து மன்னரின் ஆட்சியில் இருந்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் பாகிஸ்தானுடன் சேராமல் தாம் தனித்து ஒரு நாடாக இருக்கவே அது விரும்பியது. ஆனாலும், பாகிஸ்தானின் ஆதரவுடன் சில பழங்குடியினர் காஷ்மீரைத் தாக்க எத்தனிக்கவே இந்தியாவின் உதவியை அப்போது காஷ்மீர் கோரியது. ஆனால், காஷ்மீர் இந்தியாவுடன் இணையும் பட்சத்தில் உதவுவதாக இந்தியா கூற, அதற்கேற்க தமது இறைமை, சுயாதிக்கம் பாதிக்கப்படாத வகையில் சில சிறப்பு ஏற்பாடுகளுடன் அது இந்தியாவுடன் இணைந்தது. ஒரு தன்னாதிக்கம் நிறைந்த நாடாகத் தனியான தேசியமாக திகழ்வதே அந்த மக்களின் எதிர்பார்ப்பு. அதற்காகவே இந்த சிறப்பு அந்தஸ்து.

**சீவகன் பூபாலரட்ணம்**

ஆனால், அவற்றையே இப்போது இந்திய அரசாங்கம் பறித்திருக்கிறது.

இந்திய நாடாளுமன்றத்தில் பிஜேபி அரசின் பெரும்பான்மை இந்த காஷ்மீர் விவகாரத்தில் ஒட்டுமொத்த முடிவெடுக்க உதவியுள்ளது. சிறுபான்மையை கொண்டிருந்த எதிர்க்கட்சிகளால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. அவை செய்யக்கூடியவற்றைக் கூடச் செய்யவில்லை என்ற விமர்சனமும் இருக்கிறது.

காஷ்மீர் நேரடியாக ஒரு மாநிலமாக இருந்து யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டு டில்லியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை தெற்கில் உள்ள பல மாநிலங்களில் கூட அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

தமிழ் நாட்டைக் கூட நாளை நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தின் மூலம் யூனியன் பிரதேசமாக மாற்றி டில்லியின் ஆட்சியின் கீழ் கொண்டுவந்து விடலாம் என்று எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன. இந்தியாவின் இறைமைக்கே இது ஒரு பாதகம் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

காஷ்மீரைப் பொறுத்தவரை காஷ்மீர் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதி, ஜம்முவில் இந்துக்கள் அதிகம், லடாக்கில் பௌத்தர்கள் மற்றும் சீக்கியர்கள் கணிசமாக வாழ்கின்றனர். அந்த மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதால் லடாக்கில் உள்ள மக்கள் ஓரளவு மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால், காஷ்மீர் மக்கள் இந்திய இராணுவத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளனர். ஜம்முவில் இருக்கும் மக்கள் கூட, காணி உரிமை தொடர்பில் தமக்கு இருந்த சிறப்பு உரிமை நீக்கப்பட்டதால் மகிழ்ச்சி இழந்துள்ளனர். ஆக மொத்தத்தில் அந்தப் பிராந்தியத்தின் பெரும்பாலான மக்கள் இந்த முடிவால் அதிருப்தி அடைந்துள்ளனர். 'இந்தியா வெளியேறு' என்று அவர்கள் கோஷம் போட்டு வருகின்றனர். கற்களால் இந்தியத் துணைப்படையைத் தாக்கி வருகின்றனர்.

இந்திய அரசாங்கத்தின் இந்த முடிவை

தொடர்ச்சி பக்கம் 07

# ஹிஸ்புல்லாவிடம் கற்க வேண்டியவை...... ஒரு சேதி

இலங்கை முஸ்லிம்களின் அடையாளம் காத்தான்குடி என்றால் காத்தான்குடியின் அடையாளம் ஹிஸ்புல்லா ஆவார். அந்தளவிற்கு அவர் காத்தான்குடியின் அரசியல்,சமூக,கலாசாரா விடயங்களில் இரண்டறக் கலந்தவர். அஷ்ரப் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ் தேர்தல் அரசியலில் காலடியெடுத்து வைத்தபோது ஹிஸ்புல்லாவும் தனது அரசியல் கன்னிப்பயணத்தினை தொடங்கினார்.

**அறுமுக்குட்டி**

1989ஆம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் அமர்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரிசையில் அவரும் ஒருவர். அன்றிலிருந்து இன்றுவரை சுமார் முப்பது வருடகாலமாக அரச பதவிகளில் தொடர்ச்சியாக இருந்து வருகின்றார்.

காத்தான்குடி மக்களை பொறுத்தவரையில் அவரைப்போல் ஒரு தலைமை இனி எக்காலத்திலும் கிடைக்காது என்று எண்ணுகின்றார்கள். அதனாற்தான் அவர் எந்த சின்னத்தில் நின்றாலும் அதை நோக்கி 'அதுவே காத்தான்குடி மக்களின் சின்னம்' என்பதாக மக்கள் அவரின் பின்னால் அணி திரளுகின்றனர். காத்தான்குடி பட்டினத்தை பாரிய அபிவிருத்தியடைய செய்தமையில் அவருக்கு நிகர் அவரேதான். ஒரு தனி ஊரை மட்டும் அடிப்படையாக கொண்டு இயங்கும் ஒருவர் தேசிய அளவில் எந்தவொரு அரசியல்வாதியும் செய்திருக்கமுடியாத அளவுக்கு தனது சமூகம் சார்ந்து பணி செய்வதில் வெற்றி கண்டிருக்கின்றார்.

அந்த வகையில்தான் இன்று கட்டப்பட்டிருக்கும் புனாணை தனியார் பல்கலைக்கழகம் அவரது மிகப்பெரிய சாதனையாகும். இலங்கையிலே இல்லாத அளவுக்கு பிரமாண்டமாயும் அரேபிய கட்டிடக்கலை சார்ந்தும் அந்த வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதோடு பலநூறு பேரீச்சை மரங்கள் அதனை சுற்றி நடப்பட்டுள்ளன. கண்களை கட்டிவிட்டு ஒருவரை கொண்டுபோய் அங்கே நிறுத்தி கண்களை அவிழ்த்துவிட்டால் எவருமே அது கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியென்றோ அல்லது இலங்கையின் ஒரு பகுதியென்றோ சொல்லப்போவதில்லை. ச் மாறாக ஏதோ ஒரு அரேபிய நாடு என்றுதான் உணரமுடியும். தனக்கும் தனக்குரியவர்களுக்கும் வருமானம் தேடுகின்ற ஒரு தனியார் பல்கலை கழகத்தை முஸ்லீம் அடையாளங்களுடன் அழகு படுத்தி அதனை முஸ்லீம்களுக்காக தான் செய்து முடித்த மிகப்பெரிய சேவையாக உணரவைப்பதில் முதற்கட்டமாக வெற்றி பெற்றுள்ளார் ஹிஸ்புல்லா.

கடந்த ஈஸ்டர் தாக்குதல்களையடுத்து சில முஸ்லீம் அமைச்சர்களும் அந்த பயங்கரவாதிகளுக்கு



ஹிஸ்புல்லா

உடந்தையாக இருந்தனர் என்கின்ற சந்தேகங்கள் வலுத்தது. அந்த சந்தேகங்கள் ஹிஸ்புல்லாவையும் நோக்கி எழுந்தன. அதன் காரணமாக புணானை பல்கலைக்கழகத்தை நோக்கியும் பலவிதமான சந்தேகங்கள் எழுந்தன. எத்தனை சந்தேகங்கள்? எத்தனை குற்றச்சாட்டுக்கள்? எத்தனை பயமுறுத்தல்கள்? எத்தனை நெருக்கடிகள்? எத்தனை விசாரணைகள்? ஆனால் வெறும் நான்கு மாதங்களுக்குள்ளே அனைத்தையும் வென்று இந்தப் பல்கலைக்கழகத்தை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது, எதிர்வரும் ஜனவரியில் வளாகம் திறக்கப்படும் என்று அறிக்கை விடுகின்றார் என்றால் அதுதான் ஹிஸ்புல்லா.

குறித்த பல்கலைக்கழகம் மீதோ அல்லது ஹிஸ்புல்லா போன்ற முஸ்லீம் தலைமைகள் மீதோ வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதம் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களை வலுவாக்குவதோ அல்லது நீர்த்துப்போகச்செய்வதோ அதைப்பற்றிய மீளாய்வை செய்வதோ இப்பத்தியின் நோக்கமல்ல. ஹிஸ்புல்லா போன்ற ஆளுமைகள் ஒரு பௌத்த சிங்கள மேலாதிக்க அரசினை கையாளுவதில் எப்படியெல்லாம் முன்னேறுகின்றார்கள் என்பதை உற்றுநோக்குவதே இப்பந்தியின் நோக்கமாகும்.

ஆனால் இவ்வளவு பெரிய நிதிகளை அவர் முஸ்லீம் மக்களின் பெயரில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்துதான் திரட்டியுள்ளார். அவை அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களாக இருக்கலாம். எவ்வாறாக இருந்த போதிலும் இலங்கை முஸ்லிம்களின் பெயரில் கோடிக்கணக்கான பணத்தை வெளிநாடுகளுக்கு கதை சொல்லி அவர் திரட்டியிருப்பதுதான் மிகப்பெரிய சாதனையாகும்.

குறித்த அந்த இடத்தை தெரிவு செய்வதிலும் அதற்கான அரச அனுமதியை பெறுவதிலும் அவர் வகுத்து முன்னேறிய பாதைகள் அவ்வளவு இலகுவானதாய் இருந்திருக்க முடியாது.

அண்மையில் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வளாகம் திறக்கப்பட கூடாதென்று பண்ணிய ஆர்ப்பாட்டங்களை பற்றி ஒரு ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். 'அவர்கள் தமிழ் மக்களிடம் பிரபல்யத்தை தேடுவதற்காக

தொடர்ச்சி பக்கம் 15



## சொல்லத் துணிந்தேன்! 18

கிழக்குமாகாணத் தமிழர்கள் அரசியலில் கடந்த எழுபது வருடங்களாக மூன்று விதமான சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஒன்று ஒட்டுமொத்த வடக்குகிழக்குத் தமிழர்களுக்கும் பொதுவான சவாலாக உள்ள பௌத்த சிங்கள பேரினவாதம். இரண்டு; முஸ்லீம் இனவாதம் அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதம். மூன்று; யாழ் மேலாதிக்கவாதம்.

இவற்றில் பௌத்தசிங்கள பேரினவாதமும் முஸ்லீம் இனவாதமும் புறப் பகையானவை (வெளிப்பகை). ஆனால் யாழ்மேலாதிக்கவாதம் என்பது அகப்பகையானது (உட்பகை). உள்ளிருந்து அரிப்பது; அறுப்பது. ஒப்பீட்டளவில் இதுவே ஆபத்தானது. அகப்பகையை அகற்றிவிட்டால் வெளித்தெரியும் புறப்பகையை எதிர்கொள்வது எளிதானது.

'தமிழ்த் தேசியம்' என்கின்ற உணர்ச்சிக் கடலில் வெறுமனே மூழ்கி ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சியையும் - அதன்பின் தமிழர்விடுதலைக் கூட்டணியையும் - தற்போது அவற்றின் நீட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்து தேர்தலில்களிலே ஆரம்பத்தில் வீட்டுச் சின்னத்திற்கும் அதன் பின் உதயசூரியன் சின்னத்திற்கும் தற்போது மீண்டும் வீட்டுச்சின்னத்திற்கும் 'புள்ளடி' போட்டதால் கிழக்குமாகாணத் தமிழர்கள் அடைந்த சமூக, பொருளாதார, அரசியல் நன்மைகள் என்ன? என்ற கேள்விக்கு விடை பூச்சியம் அல்லது மறைப்பெறுமானமே.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

'தமிழ் பேசும் மக்கள்' என்ற போர்வையிலும், 'நல்லிணக்கம்' என்ற வார்த்தை ஜாலத்திலும், 'தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை' என்று தமிழ் அரசியல் தலைவர்கள் ஓதிய பாடத்திலும் மயங்குண்டு கடந்தகாலத்தில் கிழக்குமாகாணத் தமிழர்கள் இழந்தவைதான் ஏராளம். தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை முக்கியமானதுதான். வேண்டப்படுவதுதான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் அது ஒருவழிப்பாதையல்ல இருவழிப்பாதையாகும். அன்றியும் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை என்பது சிங்களவர்களுக்கு எதிரான பகைமையுணர்வின் அடிப்படையில் அமையக்கூடாது. அப்படி அமைவது ஆரோக்கியமானதல்ல. கிழக்கில் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை எவ்வளவுக்கு முக்கியமோ அதேபோல் தமிழ் - சிங்கள ஒற்றுமையும், அதேபோல் தமிழ் - சிங்கள – முஸ்லீம் முத்தரப்பு உறவும் முக்கியமானது.

இதுவரை காலமும் யாழ்மேலாதிக்கவாத சிந்தனைகளினால் கட்டமைக்கப்பட்ட குறுந்தமிழ்த்தேசியவாதமானது சிங்களவர்களுக்கு எதிரான மனோநிலையில் கிழக்கிலே ஒரு போலித் தமிழ் - முஸ்லிம் உறவையே ஏற்படுத்திற்று. இத்தகைய ஒரு போலி உறவைத்தான் தேர்தல்மையத் தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்மைய முஸ்லீம் அரசியல்வாதிகளும் காலம்காலமாகக் கட்டி வளர்த்தார்கள். இத்தகைய போலித் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையால் பாதிக்கப்பட்டவர்கள் கிழக்குத் தமிழர்களே. காரணம் கிழக்குமாகாண முஸ்லீம்களைப் பொறுத்தவரை தங்களுக்கிருந்த அரசியல் அதிகாரம் மற்றும் செல்வாக்கினாலும் பொருளாதார பலத்தினாலும் தங்களைத் தற்காத்துச் சமூகபொருளாதார அரசியல் ரீதியாகப் பலம்வாய்ந்த சமூகமாகத் தங்களைத் தகவமைத்துக் கொண்டார்கள். அது அவர்களது தவறும்




அல்ல. ஆனால் அரசியல் அதிகாரமும் செல்வாக்கும் பொருளாதாரபலமும் அற்ற அப்பாவிக் கிழக்குத் தமிழர்கள் யாழ் குடாநாட்டுக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்காகப் 'பலி ஆடு' ஆக்கப்பட்டார்கள்.

யாழ்மேலாதிக்கவாதக் குணாம்சம் கொண்ட குறுந்தமிழ்த் தேசியவாதத் தமிழ்த்தலைவர்கள் காட்டிய 'பட்டுவேட்டிக் கனவில் மயங்குண்டு இன்று இடுப்பிலே கட்டியிருந்த கோவணத்துண்டையும் இழக்கும் நிலைக்குக் கிழக்குத்தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். யாழ்மேலாதிக்க வாத மேட்டுக்குடி அரசியல் கிழக்கில் எப்போதுமே முஸ்லீம் இனவாதத்திற்கு அனுசரணையாக அல்லது முஸ்லீம் இனவாதத்தைக் கண்டும் காணாத வகையிலேதான் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் விளைவுகளில் ஒன்றுதான் இன்று பூதாகரமாக வெடித்துக்கிளம்பியுள்ள கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரம்.

1965இல் ஐக்கிய தேசியக்கட்சியுடன் தமிழரசுக்கட்சி இணைந்து கூட்டரசாங்கம் அமைத்து தமிழரசுக்கட்சியின் சார்பில் செனட்டர் மு.திருச்செல்வம் கியூ.சி அவர்கள் ஸ்தலஸ்தாபன (உள்ளூராட்சி) அமைச்சராக இருந்த காலத்திலேயே கல்முனைப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் கடந்த ஐம்பது வருடகாலமாக முஸ்லிம் அரசியல்வாதிகளினால் கல்முனைத்தமிழ்ச் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட பாரபட்சங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். கல்முனை விவகாரமும் இவ்வளவு பாரதூரமான நிலைக்கு வளர்ந்திருக்கவும்

தொடர்ச்சி பக்கம் 15

---

## எப்போது பேசுவது?

பேச வேண்டிய நேரத்தில், பேச வேண்டிய முறையில் பேசாமல் விட்ட பலாபலனை இன்றும் மட்டக்களப்புத் தமிழ் சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

புல்லுமலை குடி நீர் தொழிற்சாலை விவகாரம், கற்குடா எதனோல் தொழிற்சாலை விவகாரம், எல்லை மறுசீரமைப்பு, நில ஆக்கிரமிப்பு, மேய்ச்சல் தரை விவகாரம், புதிதாக குடி நீர் தட்டுப்பாடு என இப்படி நீளும் பட்டியல் பற்பல. இறுதியாக கல்முனை வடக்கு பிரதேசச் செயலக விவகாரம். இதில் வெடிகுண்டு அறிக்கையை நம்பி கல்முனை இளைஞர்கள் வெடி சுட்டு கரியை முகத்தில் பூசிக் கொண்டதுதான் மிச்சம்.

**வ.ச.முரளீசேகரன்**

### எல்லை மீள் நிர்ணயம்

இது நீண்ட காலப் பிரச்சனை, மீண்டும் பேசு பொருளாக தொடங்கியுள்ளது. கல்முனை விவகாரம் பூதாகாரமாக வெளிக்கிளம்பியமைக்கும் உரிய வேளையில் பேசி முடிவு காணாமையே காரணமாகும். கிழக்கில் பல பிரதேச சபை உருவாக்கமும் உள்ள பிரதேச சபைகளில் எல்லைகளில் மறுசீரமைப்பும் செய்ய வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது.

கிழக்கில் சிறுபான்மைச் சமூகம் அரச ஆதரவுடனும் அதிகாரத்துடனும் பெரும்பான்மைச் சமூகம் போல் எம்மை ஒடுக்க முனைகிறது.

வாக்குப் பெற்ற மக்கள் பிரதிநிதிகள் பேசும் மொழி தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கிறது. மக்கள் திரளாக கிளர்ச்சி கொள்வதைத் தவிர வேறில்லை.

திருகோணமலையில் மூதூரில் தொடங்கி மட்டக்களப்பில் வாழைச்சேனை, ஏறாவூர்பற்று, ஆரையம்பதி என நீண்டு அம்பாறையில் கல்முனை, பெரிய நீலாவணை, பொத்துவில் என நீள்கிறது. இவை சில உதாரணங்களே முழுமையானவை அல்ல.

மூதூர் பிரதேசத்தில் கிராமசபைகளாக விளங்கிய பழம்பெரும் தமிழ்கிராமங்கள் பிரதேச சபை உருவாக்கத்தின் போது மூதூர் பிரதேச சபைக்குள் உள்வாங்கப்பட்டு, இன்று அவர்களின் தனித்துவங்கள் இழக்கப்பட்டுக்கொண்டிருப்பதுடன் நசுக்கப்பட்டும் கொண்டிருக்கிறார்கள்.

இன்று அவர்கள் மத்தியில் தங்கள் தமிழ் கிராமங்களை உள்ளடக்கி தோப்பூர் பிரதேசசபை எனும் நியாயமான கோரிக்கை எழுந்துள்ளது. இதனைப்பற்றி எப்போது பேசப்போகிறார்கள்?

ஏறாவூர் பற்றில் கரடியனாறு-புல்லுமலையை மையமாகக் கொண்ட பிரதேச சபை ஒன்றின் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. மக்கள் இதனை பேசு பொருளாக ஆக்கத் தொடங்கியுள்ளனர். இதுபழையவைதான் புதிதாக மீண்டும் கிளரப்பட்டுள்ள ஒரு விடயம்.

### தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம்

பழைய தேர்தல் தொகுதி முறையில் மட்டக்களப்பு மட்டும் இரட்டை அங்கத்தவர் தொகுதி, கற்குடாவும் பட்டிருப்பும் ஒற்றை அங்கத்தவர் தொகுதி. இதன்படி மட்டு மாவட்டத்தில் மூன்று தமிழ் பிரதிநிதியும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவாவர். அவ்வாறாயின் தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையில் நான்கு தமிழ் பிரதி நிதிகளும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் வரவேண்டும் .ஆனால் நடைமுறையில் அவ்வாறில்லை, தமிழர்கள் தேசியகட்சிகளுக்கு வாக்களிப்பதனாலும் வாக்களிக்க சோம்பேறிப்படுவதனாலும் (தமிழ் பிரதேசங்களில் சராசரி வாக்களிப்பு வீதம் 60 வீதம், முஸ்லிம் பிரதேசங்களில் 90 வீதம்) நான்கு வர வேண்டிய தமிழ் பிரதிநிதி மூன்றாகவும், ஒன்று வரவேண்டிய முஸ்லிம் பிரதிநிதி இரண்டாகவும் வருகின்றது.

இதனை உணர்ந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள்இதனைத் தொடர்ந்து தக்கவைக்க புதிய எல்லை நிர்ணயத்தில் அதற்கான திட்டவரைவுகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். இதற்காக காத்தான்குடியை மையங் கொண்டு அப்படியே சில தமிழ் பிரதேசங்களை உள்ளடக்கியதாக ஒரு தேர்தல் தொகுதியும், ஓட்டமாவடியை மையங் கொண்டு புணானை வரை ஒரு தேர்தல் தொகுதி முன்வரைபும் உத்தேசிக்கப்பட்டு சில முன்னெடுப்புக்கள் நடைபெறுகிறது.

இது அவர்களின் முயற்சி நமது முயற்சி என்ன? இது பற்றி எப்போது நாம் பேசப் போகிறோம்.

### மின்சாரத்தின் பெயரால் வயலை இழப்பதா?

மின்தேவையை பூர்த்தி செய்தல் எனும் போர்வையில் வயல் சூழ்ந்த படுவான்கரை மண்ணில் வவுணதீவு பிரதேச சபை எல்லைக்குள் பன்சேனை, காந்திநகர் ஆகிய இரு இடங்களில் 49.5 ஏக்கர் நிலமும், வாகரை காயாங்கேணி பிரதேசத்தில் 49.5 ஏக்கர் நிலமும் அபிவிருத்தி என்ற சங்கதியில் காத்தான்குடியை உரிமையாளராகக் கொண்ட சிங்கள பெயர் கொண்ட நிறுவனத்திற்கு வழங்கப் படுகிறது. ஏன் 50 ஏக்கர் என்று முழு எண்ணில் கொடுக்கவில்லை, கொடுத்திருக்கலாமேயென்றால் 50 உம் அதற்கு மேலேயும் என்றால் முதலீட்டு ஊக்குவிப்பு சபை உட்பட பல இடங்களுக்கு போய் சிக்கல் பட வேண்டியிருக்கும் என்பதனால் இந்த உத்தியை கைக்கொள்கிறார்கள். நம்மவர்கள் இதைப்பற்றிப் எப்போது பேசுவது?

பேச வேண்டிய நேரத்தில், அந்த சந்தர்ப்பங்களெல்லாம் நாடி வந்த போதும் பேசாமல் விட்டு விட்டோம், இனிமேலும் எப்போது பேசப்போகிறோம். பெரும்பான்மையாக பார்வையாளர்களாகவும், சிறுபான்மையாக பங்காளர்களாகவும் இருக்கும் மனநிலை முதலில் மாற்றமுற வேண்டும், மக்கள் திரளாக திரட்சி கொள்ள வேண்டும். நிர்ப்பந்தங்களுக்கான சூழல் உருவாகும். அப்போது மௌன மொழி களைந்து பேசத் தொடங்குவார்கள்.

# எழுக தமிழின் அரசியல்



தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்கள் 'எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு, சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் ஏற்பட்டுள்ள தேங்குநிலை, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத் தகு விசாரணைகள் நடைபெறாமை, இராணுவமயமாக்கல் மற்றும் மீள் குடியமர்வு ஆகிய ஆறு கோரிக்கைகளை முன்னிறுத்தி சர்வதேச கவனத்தைக் கவரும் வகையில் 'எழுக தமிழ்' பாணியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த வேண்டும் என பேரவை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.' எனச் செய்திகள் கூறுகின்றன.

மேற்படி விடயங்கள் தொடர்பாகவும் அல்லது அதற்கு மேலாகவும் கோரிக்கைகள் வைத்து மக்கள் போராட்டங்களை நடாத்த வேண்டியது இன்றைய தமிழர்களின் ஒவ்வொருத்தருடைய தார்மீகப் பொறுப்பாக இருப்பதை மறந்துவிடலாகாது. ஆனால் இந்த மக்கள் போராட்டத்துக்கு தலைமை வகிப்பதற்கும் அதனை வழிநடத்துவதற்குமான அந்தஸ்த்தினையும் தத்துவார்த்த தளத்தினையும் தமிழ் மக்கள் பேரவை கொண்டிருக்கின்றதா என்பதுதான் கேள்விக்குறியாகும்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு விடுதலைப் புலிகளே தடையாக இருக்கின்றனர் என யுத்தகாலத்தில் அரசால் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. யுத்தம் முடிந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர்களுக்கான அரசியல் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் என்று நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு கடந்த 10 வருடங்களாக எந்த ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் இன்றி அரசின் வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்களுக்கு காலக்கெடுக்களைக் கூறி அரசைக் காப்பாற்றி வந்ததே தமிழர் தலைமைகள் செய்திருக்கின்ற சாதனை எனலாம்.

இந்த நிலையில்தான் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் தியாகங்களையும் முன்கொண்டு செல்வதற்கு அரசியல் தவிர்ந்த ஒரு மக்கள் அமைப்பின் தேவை உணரப்பட்டது. 'தமிழ் மக்கள் பேரவை' இந்த தேவையின் நிமித்தம் உருவாகிய ஒரு அமைப்பாக தோற்றம் காட்டியது. ஆனால் அது அவ்வாறான ஒரு மக்கள் அமைப்பு என்பதற்குரிய எந்த அடிப்படைகளையுமே கொண்டிருக்கவில்லை. ஏனெனில் மக்கள் போராட்டம் தொடர்பாக எந்த அனுபவமும் அக்கறையும் இன்றி தனது சுய வாழ்க்கைக்காக இலங்கை அரசின் நீதித்துறையின் காவலனாகக் கடமைபுரிந்தவர் தனது ஓய்வின் பின் அரசியலுக்கு இழுத்துவரப்பட்ட பின்னர் தனக்குக் கிடைத்த அரசியல் அதிகாரத்தினையும் அந்தஸ்தினையும் நிரந்தரமாக்கும் நோக்குடன் அவரால் முன்நகர்த்தப்பட்ட ஒன்றே 'தமிழ் மக்கள் பேரவை' ஆகும்.




இது தனிநபர் நலனையும் கட்சிகளின் நலனையும் தமிழ் மக்களின் பேரால் காப்பாற்றிக் கொள்ளும் ஒரு கட்சி அமைப்பே தவிர அரசியல் இலாபம் கலந்த மக்கள் அமைப்பு இல்லை என்பது அதன் தலைமைத்துவ குணாம்சத்திலிருந்தும் அதன் ஆரம்ப கால கூட்டிலிருந்தும் புலனாகியது.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் வடிவமாக சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட 'தமிழ் மக்கள் கூட்டணி' எனும் கட்சி உருவாகியுள்ளது. கட்சி அரசியல் தவிர்த்து ஒரு மக்கள் அமைப்பாக நின்று தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினை முன்னெடுக்க முடியாத தலைவர்களாகத்தான் எமது தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதை திரு.சி.வி. விக்கினேஸ்வரன் அவர்கள் உருவாக்கிய 'தமிழ் மக்கள் கூட்டணி' எனும் கட்சி உணர்த்தி நிற்கின்றது.

தமிழர்களுடைய அரசியல் உரிமைகளை கட்சி அரசியலுக்கூடாக பெற நினைப்பது தவறு என்பதை தமிழர் அரசியல் வரலாறு காட்டிநிற்கின்றது.

மேட்டுக்குடி தமிழர்கள் தங்கள் அரசியல் இலாபத்துக்காக தமிழர் அரசியலையும் தமிழுணர்வையும் சாதுர்யமாகப் பயன்படுத்தி வந்துள்ளதை தமிழர் அரசியல் வரலாறு முழுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தமிழ் காங்கிரஸ்சின் வாக்கு வங்கியை தம்பக்கம் எடுப்பதற்காக தமிழுணர்வை கையாண்டார்.

இது தமிழர்களை தன்பக்கம் ஒன்று திரட்டுவதற்கு பெரிதும் உதவியதே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளை, அவர்களுக்கிருக்கும் அரசியல் உரிமைகளை இலங்கை மயப்படுத்துவதற்கு உதவவில்லை.

இதனால் தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டம் குறுந்தேசியவாதப் போராட்டமாகத் தடம் மாறியது. இத்தடம் மாறுகையினால் சிறுபான்மையினருக்காக ஆதரவு தெரிவித்து இயங்கிய பெரும்பான்மையின நேச சக்திகள் தமிழர்களுடைய கோரிக்கைகளையும் போராட்டங்களையும் தமிழர் இனவாதமாக நோக்கி தங்களுடைய ஆதரவினை விலக்கிக் கொண்டனர். இது பேரினவாதச் சக்திகள் பலம் பெற்று தமிழர் உரிமைகளை மறுப்பதற்கான வாய்ப்பை வழங்கியது.

**எழுவான் வேலன்**

தமிழரசுக் கட்சிக்குப் பின்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் அனைத்துமே சுயநிர்ணயத் தளத்தில் இல்லாது தமிழர் இன உணர்வுத் தளத்தையே மையப்படுத்தியிருந்தன.

இதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது தமிழ் மக்கள் பேரவை தமிழ் உணர்வை மையப்படுத்தி தமிழர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இப்போராட்டத்தினூடாக தமது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணிக்குத் தேவையான வாக்கினைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இடத்தைப் பிடிப்பதே இவர்களுடைய அரசியல் நோக்கம் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறான போக்கு தமிழர்களுக்கு ஓர் அதிகார மாற்றீட்டை வழங்குமேயன்றி தமிழர்கள் எதிர்பார்க்கும் அரசியல் உரிமைகள் எதனையும் வழங்காது என்பதில் தமிழர்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் பேரவையும் தமிழ் மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை தமிழ் இனவாத சேற்றுக்குள் மூழ்கடித்து பேரினவாதத்தை பலப்படுத்துவதற்கே உதவும்.

மற்றும்படி சர்வதேசத்தைக் கவர்தல் அல்லது சர்வதேசத்துக்குக் காட்டல் என்ற விடயம் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களினால் 1947ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கான முதலாவது தேர்தலின் போதிருந்தே கூறப்பட்டு வரும் விடயமாகவே இருக்கின்றது.

இவ்வாறு கூறிக் கூறியே தமிழர்களை முட்டாள்களாக்கி வைத்துள்ளார்கள். சர்வதேசத்தின் கவனத்தைக் கவர்வதற்கு முன் இலங்கையின் பெரும்பான்மையின மக்களின் கவனத்தைப் நாம் பெறுதல் முக்கியமானது என்பதை தமிழ் மக்கள் உணர்தல் வேண்டும்.

அவர்கள் கவனத்தை நாம் பெறும்வகையில் எமது போராட்டவடிவங்கள் வடிவமைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும். 'எழுக தமிழ்' என்பது முழுக்க முழுக்க இன உணர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு சொற்பதமேயாகும்.

இவ்வாறான சொற்பதங்கள் தமிழர்களை தம்பக்கம் ஒன்றுதிரட்டி வாக்குப் பெற உதவுமே யன்றி பெரும்பான்மையினரின் கவனத்தைப் பெறுவதற்கு மாறாக பெரும்பான்மையினர் விரோதத்தைப் பெறும் நடவடிக்கையாகவே அமையும்.

முஸ்லிம்கள் தங்கள் உரிமைக்காக இவ்வாறு 'எழுக முஸ்லிம்' என்றோ அல்லது சிங்களவர்கள் சிறுபான்மையினருக்கு எதிராக 'எழுக சிங்களம்' என்றோ தங்கள் போராட்டத்துக்கு பெயர் வைத்து நடாத்துவார்களாக இருந்தால் தமிழர்களாகிய நாம் அதனை ஒரு இனவாத நடவடிக்கையாகவே நோக்குவோம். அவர்களுடைய போராட்டம் எவ்வளவுதான் நேர்மையானதாக இருந்தாலும் அது எம்மை சிறிது அச்சம் கொள்ள வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இது போன்றுதான் பெரும்பான்மையின மக்களுக்கு 'எழுக தமிழ்' என்பதும் ஆகும். இது இன உணர்வை அடிப்படையாகக் கொண்ட ஓர் இனத் தூண்டல் நடவடிக்கையின் சொற்பதமாக இருப்பதை எவரும் மறுத்துவிடலாகாது. எமது உரிமைக்கான போராட்டம் என்பது மற்றவர்களை அச்சத்துக்குள்ளாக்காது மற்றவர்களுடைய உரிமைகளை பறிக்காது நமது உரிமையினை நாம் அனுபவிப்பதற்கான போராட்டமாக இருக்கவேண்டியது அடிப்படையாகும்.

ஆனால் தமிழ் பேரவையினர் தமிழ் இனவாத உணர்வுக்குள் அடிமையானவர்களாக நின்று கொண்டே தமிழர் உரிமை பற்றிப் பேசுகின்றனர். இது அவர்களின் தத்தவார்த்தத் தவறாகும்.

எனவே தமிழர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாலான வலுவான மக்கள் அமைப்பொன்றை உருவாக்குதல்



வேண்டும்.

இந்த மக்கள் அமைப்பு கட்சி அரசியலைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் நெறிப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பெரும்பான்மையின நேச சக்திகளுடன் உறவினைக் கட்டியெழுப்பி தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகள் அரசியல் உரிமைகள் தொடர்பான கரிசனையை அவர்களுக்கு ஏற்படுத்தி அடக்குமுறையற்ற சுபீட்சமான சமுதாயமாக முழு இலங்கையும் கொண்டு வருவதற்கான போராட்ட வழிமுறைகள் தொடர்பாகச் சிந்தித்து செயற்படுத்துதல் வேண்டும்.

இதை விடுத்து கடந்து வந்த பாதையில்தான் மாற்றமின்றி பயணிப்போம் என்பதும் மாற்றுப் பாதைகள் தொடர்பாக சிந்திப்பவர்களை தமிழினத் துரோகியாக அடையாளப்படுத்தி மகிழ்வதும் இலங்கைத் தமிழர்களுக்கு விடிவைத்தராது.

# பலவீனமானவர்கள் பலமாக மோதும் தேர்தல் களம்...

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறலாம் என்ற அறிவிப்புடன், தென்னிலங்கை அரசியல் களம் தற்காலிகமாக அதை மையப்படுத்தித் திசை மாறியிருக்கிறது. கூடவே, வட - கிழக்கு அரசியல் களம், 'இப்போதைக்கு அவசரப்பட வேண்டியதில்லை' என்ற நிலைப்பாட்டிற்குச் சென்றிருக்கிறது. வட - கிழக்கில் இப்போது அவசரப்பட 'ஒன்றுமே இல்லை' தான்!

எனினும் வட- கிழக்கின் பல முனைகளிலிருந்தும், யார் வெற்றியடையப் போகிறார்கள் என்பது குறித்துக் கருத்துக்கள் முன்வைக்கப்படத் தொடங்கி விட்டதனைக் காண்கிறோம். இன்னமும் பிரதான 'முன்னணிகள்' தங்கள் வேட்பாளர்களை அறிவிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையிலும் இக்கதை தொடர்கிறது.

இன்றைய நிலையில், இலங்கையில் தனிப்பெருங்கட்சி ஒன்றினதும் தனிப் பெருந்தலைவர் ஒருவரினதும் செல்வாக்கு இல்லாதமை நன்கு அவதானிக்கப்பட்டதொரு விடயம். தனிப்பெருங்கட்சி ஒன்றோ அல்லது தனிப்பெருந் தலைவர் ஒருவேரா ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் தனித்து வெற்றி பெறும் நிலையில்லை. அண்மைய உள்ளூராட்சித் தேர்தலிலும் அதுவே கதை.

இலங்கை அரசியல் வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் கைச்சின்னமும் இன்று களத்திலில்லை! அது 1994 இல் கதிரைச் சின்னத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணியாக மாறியது. அதுவும் இன்று செல்வாக்கிழந்துள்ளது. இன்று மொட்டுச் சின்னமும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அறிமுகமாகியிருக்கிறன. எனினும் மஹிந்த ராஜபக்ஷ செல்வாக்குடைய நபராகவே இன்னமும் இருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யும் வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சி சார்பான வேட்பாளராக போட்டியிடுவார். மஹிந்த ராஜபக்ஷவும் அண்மைக்கால அரசியல் சூழலினால் சிங்களவர்களின் வாக்குப் பலத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார். எனினும் அவரும் பல கட்சிகளை இணைத்துக் கொண்டு, பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டில்தான் இருந்து வருகிறார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எனும் தனிக்கட்சி அமைத்துப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ அணியினர் கணிசமானளவு வாக்கைப் பெற்றிருந்தார்கள். அத்துடன், இலங்கையில் இடம் பெற்ற அண்மைக்காலச் சம்பவங்களின் பின்னணியில், மஹிந்த ராஜபக்ஷ அணியினர் செல்வாக்கு தென்னிலங்கையில் சிங்கள – பௌத்தர்களிடையே அதிகரித்திருக்கிறது என்றும் கருதப்படுகிறது. இதனால், மஹிந்த ராஜபக்ஷ அணியினர், தனியே சிங்கள மக்களின் வாக்குகளை கொண்டே வெற்றி பெறலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகிறது.




2015 ஆம் ஆண்டுத் ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனா, 6,217, 162 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் செல்லுபடியான வாக்குகளில் 51.28 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருந்தார். எனினும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ, 5,768, 090 வாக்குகளைப் பெற்றிருந்தார். இது செல்லுபடியான வாக்குகளில் 47.58 சதவீதமாகும். 449,072 மேலதிகமான வாக்குகளை மட்டுமே வெற்றிபெற்ற பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனா பெற்றிருந்தார். இன்றைய அரசியல் கள நிலவரத்தில் 449, 072 என்ற வாக்கிடைவெளியை மஹிந்த ராஜபக்ஷ அணியினர் இலகுவாகக் கடந்து வெற்றியைப் பெறுவர்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால், அக்கருத்தை மஹிந்த ராஜபக்ஷ அணியினரே முழுமையாக நம்பவில்லை. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குப் பலத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ சிறுபான்மையினரின் வாக்குகளை கவர்ந்திழுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷ அணியினருக்கு ஈ.பி.டி.பி, சிறிரெலோ, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகளின் ஆதரவிருந்து வருகிறது. எனினும் அண்மையில் ஈரோஸ் கட்சி, முஸ்லிம் உலமா கட்சி போன்ற சிறிய கட்சிகளையும் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மற்றொரு புறம் தேர்தல் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவை எதிர்ப்பு வாக்குகள் ஆகும். 2015 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியின் மையப்புள்ளி இந்த எதிர்ப்பு வாக்குகள்தான். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட குடும்ப ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம், சாதாரண மக்கள் வாழ்க்கையைப் பாதித்த வாழ்க்கைச் செலவு உயர்வு, அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் காட்டப்பட்ட புறக்கணிப்பு, இன – மத முரண்பாடுகள் எனப் பலவற்றின் எதிர்ப்பலைதான் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கான காரணங்கள். 2015 இல், சிறுபான்மையினரும் அராசாங்க ஊழியர்களும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான பொதுவேட்பாளருக்கு வாக்களித்தனர்.

இவ்விடயங்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ அணியினர் இன்னும் தெளிவான பதில்களை மக்களுக்கு – பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அணியினர் சிறுபான்மையினரின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் காத்திரமான முயற்சிகளை இன்னமும் மேற்கொள்ளவில்லை.

அதேவேளை மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்தவிதமான முரண்பாடுகளும் எதிரணிக்குள் கிடையாது என்று கூறியிருக்கிறார். எனினும் அவரது

**கிரான் விஜய்**

அணியில் இதற்கு எதிரான சலசலப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. மைத்திரி அணியினரின் நிலைப்பாடும் தெளிவற்றதாகவே இருந்து வருகிறது. பொலன்னறுவை வாக்குகள் யார் பக்கம் என்பது இன்னமும் மர்மமாகவே இருந்து வருகிறது. சரத்பொன்சேகாவும் சும்மா இருந்துவிடப் போவதில்லை.

மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சி தன்னுடைய பெயரையும் சின்னத்தையும் இன்றுவரை தக்கவைத்துக் கொண்டு வந்தாலும், அதுவும் பல கட்சிகள் இணைந்த முன்னணியாகவே இருந்து வருகிறது. அதுவும் பலமற்றதொரு நிலையில் கூட்டாட்சியையும் மேற்கொண்டிருந்தது. இப்போது ஜனநாயக தேசிய முன்னணியாக ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்க வேண்டியிருக்கிறது.

இன்று மைத்திரிபால சிறிசேனா அணியினரின் கூட்டும் இல்லை என்ற நிலையில், வெற்றிக்கு இணைந்திருக்கிற கட்சிகளின் தயவை நிச்சயம் பெற்றுக் கொள்ள வேண்டி நிலையில் அக்கட்சி இருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ அணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் பழைய யுகம் தோன்றி விடலாம் என்ற பதட்டமும், முஸ்லிம், மலையக, வட-கிழக்குத் தமிழர்களின் வாக்குகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நிற்பதுவும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்தும் வேட்பாளருக்குச் சாதகமானதாகவே அமையும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கென அடிப்படை ஆதரவுத்தளம் ஒன்றுண்டு. இந்த ஆதரவுத் தளத்தில் சஜித் பிரேமதாச போன்றவர்கள் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்கள். தற்போது இக்கட்சியில் இடம் பெற்று வரும் முரண்பாடுகள் சுமூகமான முறையில் தீர்க்கப்படாது போனால்தான் அடிப்படை ஆதரவுத் தளமும் சிதறுண்டு போகும். எனினும் வேட்பாளர் நியமனம் வேட்பாளரின் பலத்தைப் பாதிக்கும் வகையிலான முரண்பாட்டுக்கு சென்றிருக்கிறது.

வட - கிழக்குத் தமிழர்களிடையே, தாங்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்த நல்லிணக்க ஆட்சியாளர்கள், ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களுக்கு எதுவும் செய்து விடவில்லை என்ற ஏமாற்றமும், அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது ஏற்பட்டுள்ள கடும் விமர்சனங்களும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. 2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் வட-கிழக்கில் வாக்களிக்காதோர் தொகையும், செல்லுபடியற்ற வாக்குகளின் தொகையும் கணிசமானவை. இம்முறை இது அதிகரிக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்கால ஆட்சியின் பலவீனங்களும் மஹிந்த தரப்பினருக்கச் சாதகமானதாக அமைந்திருக்கும். உறுதியற்ற ஆட்சி என்ற கோஷமே மஹிந்த அணியினரின் பிரதான கோஷமாகும். குடும்ப சர்வாதிகராத்தை ஒழித்து ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தியமை, வாழ்க்கைச் செலவைக் குறைத்தமை, சம்பளத்தை அதிரித்தமை போன்றவை இத்தேர்தலில் கைகொடுக்குமா என்பதை அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது. அவர்களினது தற்கால ஆட்சியில் பலங்களை விட பலவீனங்களே அதிகம்.

இந்தப் பின்னணியில் இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தல், பலவீனமானவர்கள் பலமாக மோதும் தேர்தல் களமாகவே அமைந்திருக்கும் என்றே கூறவேண்டியிருக்கிறது.

## ஆலமரத் தொட்டிலிலே



- பொத்துவில் வில்லூர்பாரதி ---

ஆலமரத் தொட்டிலிலே
ஆடுதடா அழகுநிலா
அழகுநிலா நெற்றியிலே
ஆடுதடா வட்டநிலா
அம்மாவின் சேலையிலே
ஆனந்தத் தொட்டிலடா
அல்லிவிழி மூடாதோ
ஆசையிலே பெத்தநிலா

பள்ளி விட்டு அக்கா வருவா - இந்தப்
பால் நிலவ அள்ளிக்குவா
வேல விட்டு அப்பா வருவார் -இந்த
வெள்ளி நிலவத் தூக்கிடுவார்
மால பட்டா மாமா வருவார் -இந்த
;மல்லிகைய அள்ளிக்குவார்

ஆடுகிற தொட்டிலிலே
அல்லிப் பூவே நீயுறங்கு
பாடுகிற தாலாட்டில் - என்
பால் நிலவே நீயுறங்கு

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## படுவான்கரையில் பற்றி எரியும் வயல்நிலங்கள்

**படுவான் பாலகன்**



'படுவான்கரையில் தண்ணீர் இன்றி பலரின் வயிறுகள் பற்றி எரிகின்றன. அதேபோல வேளாண்மை வயல்நிலங்களும் பற்றி எரிகின்றன. என்ன அநியாயம்தான் இந்த நாட்டில நடக்கின்றது?' என மணற்பிட்டி சந்தியில் நின்று வெள்ளையனும் விநாயகனும் பேசிக்கொண்டிருந்தனர்.

குடிநீருக்காக ஆறு ஏழு கிலோமீற்றர் சென்று நான்கு வாளி நீர் அள்ளிவிட, கிணற்றின் அடியில் மணல்தெரிய மீண்டும் நாலு வாளி தண்ணீர் ஊறும் வரை பார்த்திருந்து, வரம்பு, மேடு, பள்ளம் என முட்டியுடனும், கலன்களுடனும் நடந்து அவற்றிலே தடக்கி வீழ்ந்து காயம் ஏற்பட்டு நாட்பொழுதில் அரைவாசிக்கு மேலான நேரத்தினை தண்ணீரை தேடி அலைவதிலேயே கழித்து, இன்று, நாளை மழை பெய்யாதா? என வானத்தினையும் அண்ணார்ந்து பார்த்து ஆண்டவனையும் நினைத்து நொந்து கொண்டு, வானம் இருள்வதும் பார்த்து சந்தோசம் அடைவதும், பின் மழைபெய்யாமல் செல்ல மனம் சோர்ந்து போவதும், வெப்பத்தின் உச்சத்தால் உடல் எரிவதும், வாழ்வில் நிலைப்போமா? என்ற உணர்வுநிலை படுவான்கரை மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது என்கிறார் வெள்ளையன்.

வெள்ளையனும் நீருக்கான போராட்டத்தில் அகப்பட்டிருக்கின்றான். இதனால் அவனும் அதிகாலையில் இருந்து, நித்திரை செல்லும் வரை வேறு வேலைக்கும் செல்ல முடியாதவனாக நீரினை பெற்றுக்கொள்வதற்காக சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றான். அவனின் மனநிலையும் விரக்தியும், வெறுப்பும் கலந்ததாகவே இருக்கின்றது.

குடிநீருக்கான தவிர்ப்பு ஒரு பக்கமாகவிருக்க, வரண்டுபோய் கிடக்கும் வயல்நிலங்களையும், புற்தரைகளையும், வயலிலே அறுவடை செய்த நெல்லின் வைக்கோல்களையும் சிலர் எரித்து விடுகின்றனர். இதைபார்த்தாலே மனம்நொந்து போகின்றது என்கிறார் விநாயகன். படுவான்கரைப் பகுதியில் சில இடங்களில் இவ்வாறான மோசமான செயல் நடைபெறுகின்றது. ஏன் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இதை தட்டிக்கேட்க யாரும் இல்லையா? எனவும் விநாயகன் வினா எழுப்புகின்றான்.

கால்நடைகள் நீரின்றியும், பச்சையான புற்தரைகள் இன்றியும் உண்பதற்கு உணவில்லாதும், குடிப்பதற்கு நீரின்றியும் அவதியுறும் நிலையில் கால்நடைக்கான உணவினை அழிக்கும் செயற்பாட்டை முன்னெடுகின்றார்களே! மண்ணிலே உருவாகக்கூடிய மண்புழுக்களையும், வயல்நிலங்களுக்கு நன்மை தரக்கூடிய புழுக்களையும் அழிக்கின்றனர். வயல்நிலத்தில் பசளை தரக்கூடிய வைக்கோல்களையும் வயல்நிலத்திலே கிடந்து அழிந்து பசளையாக விடாமல் தீ வைக்கின்றனர். வரண்டுபோய் கிடந்த நிலங்களில் காட்டுத்தீ போல நெருப்பு பரவி செல்கின்றது. பார்ப்பதற்கே மனம் இடம்கொடுக்கவில்லை. வயல்களுக்கு தீ வைப்பதினால் ஏற்படக்கூடிய தீங்குகள் தொடர்பில் விளக்கமில்லாது செய்கின்றனரா?. அல்லது தெரிந்தும் புற்களை இல்லாமல் செய்கின்றோம் என்ற நிலைப்பாட்டில் செய்கின்றனரா? என்ற வினாவும் தேங்கி நிற்கின்ற நிலையில், விவசாய அபிவிருத்தியில் பங்கெடுக்கும் திணைக்களங்கள், அதுசார்ந்த உத்தியோகத்தர்கள் விவசாயிகளை உடன் அணுகவேண்டிய தேவை தற்காலத்தில் உருவாகியிருக்கின்றது.

பாரம்பரிய விவசாயச் செய்கைகளின் போதும் இவ்வாறான சிக்கல்கள் இருக்காத அதேவேளை, கடவுள் நம்பிக்கையும், மனநம்பிக்கையும் மேலோங்கியிருந்தது. இதனால் சிறந்த விளைச்சலைப் பெற்றமையுடன், உயிரினங்களும் தமது வாழ்க்கையினை சிறப்புற கடத்தியும் இருந்தன. தற்போது விவசாயிகளுக்கான தெளிவுபடுத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். உரிய தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டு, இயற்கை முறையிலும், உயிரினங்களுக்கு பங்கம் வராத வகையிலும், இயற்கைக்கு பாதிப்பு ஏற்படாத முறையிலும் விவசாயத்தினை மேற்கொள்வது, ஆயத்தப்படுத்து தொடர்பில் குறிப்பிட்டு, அவ்வாறான தெளிவுபடுத்தல்களையும் கேட்டதன் பின்பும் தவறுகள் இழைக்கின்றவர்களுக்கு தகுந்த தண்டணைகளை வழங்குவதுடன், அரசினால் வழங்கப்படும் மானியங்களையும் நிறுத்துவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். இன்று காடுகளை அழித்து நீரின்றி வாடுகின்றோம். அவ்வாறான நிலையினை மிகமோசமாக தொடர்ந்தும் கொண்டு செல்லாதிருக்க இப்போதே செயற்றிட்டங்களை வகுக்க வேண்டும் என்கிறார் வெள்ளையன். அவ்வாறு கூறிக்கொண்டே இருவரும் அவ்விடத்தினை விட்டு அகன்றனர்.



---

தொடர்ச்சி...

## காஷ்மீர் -- எந்த தருணத்தி....

இலங்கை வரவேற்றுள்ளது. இலங்கையில் தமிழர் பிரச்சினையை தீர்க்க, வடக்கு கிழக்குக்கு இணைந்த, சமச்சீரற்ற சிறப்பு அதிகாரங்களைக் கொண்ட காஷ்மீர் போன்ற தமிழர் மாநிலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது காஷ்மீருக்கே சிறப்பு அந்தஸ்து ரத்துச் செய்யப்பட்டதால், இங்கு இந்திய அரசாங்கத்தால் '13வது திருத்தத்தின் மூலம் தமிழர் உரிமையை வழங்கு' என்று சொல்வதுகூடச் சிரமமாகிவிடும்.

பாகிஸ்தான், காஷ்மீரின் சிறப்பு அதிகாரங்கள் ரத்துச் செய்யப்பட்டதையும் அது நேரடியாக டில்லியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டதையும், மாநிலம் பிரிக்கப்பட்டதையும் கண்டித்துள்ளது. இந்தியாவுக்கு அதற்கு உரிமை கிடையாது என்கிறார் பாகிஸ்தான் பிரதமர் இம்ரன்ஹான். விடயத்தை ஐநாவுக்கு கொண்டுபோகப் போவதாக அவர் கூறியுள்ளார். ஆனால், காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்விவகாரம் என்கிறது இந்தியா. ஆனால், காஷ்மீரின் ஒரு பகுதி இன்னமும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோல, லடாக்கின் சில பகுதிகள் தற்போது சீனாவின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. பாகிஸ்தானுக்கான சீனாவின் வணிகப்பாதையில் இதனால் பாதிப்பு வரும் வரக்கூடும். அதனை முன்னிட்டு சீனாவும் இந்தியாவின் இந்த முடிவை எதிர்க்கிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தியாவின் தற்போதைய நண்பனாக ஒப்பீட்டளவில் பார்க்க முடியும். ஆனாலும் ஒரு எச்சரிக்கையுணர்வுடனேயே அமெரிக்கா இந்த விடயத்தில் கருத்துக் கூறியுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் காபூல் அரசுக்கும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால்தான் அமெரிக்காவால் அங்கிருந்து வெளியேற முடியும். அதற்கு பாகிஸ்தானின் உதவி தேவை. காஷ்மீர் விவகாரம் பாகிஸ்தானை மறுபுறம் இழுத்தால், ஆப்கான் விடயத்தில் பாகிஸ்தானால் அமெரிக்காவுக்கு உதவ முடியாது. ஆகவே, காஷ்மீர் விவகாரம் பற்றி எரிவதை அமெரிக்காவும் அவ்வளவாக விரும்பும் என்று கூறமுடியாது.

ஆக உள்ளூரிலும், வெளிநாட்டிலும் இந்த விவகாரம் கொஞ்சம் அதிருப்தையை ஏற்படுத்தியுள்ளமை உண்மையே. இதனை இந்தியா எப்படி கையாளப்போகிறது என்பது மற்றவர்களுக்கும் ஒரு பாடமாகவே அமையும். ஜனநாயகம் எவ்வாறு காக்கப்படப் போகின்றது என்பதும் ஏற்கனவே பல ஆண்டுகளாக நெருக்கடியில் இருக்கும் காஷ்மீர் மக்களுக்கு இது என்ன செய்யப் போகின்றது என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# விளையாட்டு

## ஆஷஸ் தொடரின் முதல் ஆட்டத்தில் வென்ற அவுஸ்திரேலியா



இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பர்மிங்ஹாம் எட்ஜ்பஸ்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி ஸ்மித்தின் 144 ஓட்டங்களுடன் முதல் இன்னிங்சில் 284 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி பேர்ன்ஸின் 133 ஓட்டங்களுடன் 374 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. 90 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி ஸ்மித் மற்றும் மெத்யூ வாடே ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 487 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை 2-வது இன்னிங்சை இடைநிறுத்தி இங்கிலாந்து அணிக்கு 398 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பின்னர் 2-ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியா அணியின் நாதன் லயன் மற்றும் பெட் கம்மின்ஸ் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 146 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 251 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. போட்டியில் ஆட்ட நாயகனாக ஸ்மித் தெரிவானார். தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் 14-ம் திகதி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## இருபதுக்கு 20 தொடரை கைப்பற்றியது இந்தியா அணி




இந்தியா - மேற்கத்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகளை கொண்ட சர்வதேச இருபதுக்கு20 தொடரை 3:0 என்ற ரீதியில் இந்திய அணி வெற்றி கொண்டுள்ளது.

இம் மாதம் 3-ம் திகதி ஆரம்பமான தொடரின் முதலாவது போட்டியில் 4 விக்கட்டுக்களாலும் இரண்டாவது போட்டியில் டக்வேத் லூவிஸ் முறை மூலம் 22 ஓட்டங்களினாலும் மூன்றாவது போட்டியில் 7 விக்கட்டுக்களினாலும் வெற்றி பெற்ற இந்தியா அணி தொடரை முழுமையாக கைப்பற்றியுள்ளது.

இவ்விரு அணிகளுக்கமிடையிலான 3 போட்டிகளைக்கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித் தொடர் எதிர்வரும் 8-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்த மலையக வீரர்



சீனாவில் கடந்த 26-ம் திகதி முதல் 29-ம் திகதி வரை நடைபெற்ற 53ஆவது ஆசிய ஆணழகன் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் இலங்கை அணி சார்பாக கலந்து கொண்ட மலையகத்தின் நுவரெலியா - லபுக்கலை பெருந்தோட்டத்தைச் சேர்ந்த மாதவன் ராஜ்குமார் ஆண்களுக்கான 60 கிலோ எடைப் பிரிவு மற்றும் 23 வயதுக்குட்பட்ட கனிஷ்ட சம்பியன்ஷிப் போட்டிப் பிரிவு ஆகியவற்றில் கலந்து கொண்டு மூன்றாவது இடத்தினைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினை வென்று இலங்கை அணிக்கான முதலாவது பதக்கத்தினை பெற்றுக் கொடுத்தார்.

இதேசமயம் தனக்கு சர்வதேஷ ஆணழகர் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக பதக்கமொன்றை வென்று நாட்டிற்கும் மலையகத்திற்கும் பெருமை சேர்க்க முடியும் என மாதவன் ராஜ்குமார் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சர்வதேச ஆணழகர் போட்டியை எதிர்கொள்வதற்கான நம்பிக்கையும் திறமையும் தன்னிடம் காணப்படுகின்ற போதிலும் குறித்த போட்டியில் கலந்துக் கொள்வதற்காக யாரேனும் தனக்கு உதவிகளை வழங்க முன் வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## காவேரியை வீழ்த்திய விவேகாநந்தாவிற்கு டொல்பின் கிண்ணம்!



காரைதீவு நிருபர் சகா

கல்முனை டொல்லிபின் விளையாட்டுக்கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் பெரியநீலாவணை காவேரி விளையாட்டுக்கழகமும் நற்பிட்டிமுனை விவேகானந்தா விளையாட்டுக்கழகமும் போட்டியிட்டன. 11 ஓவர்கள் கொண்டதாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பாடிய விவேகானந்தா அணி 81 ஓட்டங்களை ஐந்து விக்கட்டுக்களை இழந்து பெற்றது, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காவேரி அணி 10.4 ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


விவேகானந்தா அணி வெற்றிபெற்று 2019 ஆம் ஆண்டிற்கான டொல்பின் கிண்ணத்தை பெற்று சம்பியனானது. இச்சுற்றுப்போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

கல்முனை கார்மேல் பற்றியமா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியை தொடர்ந்து வெற்றிபெற்ற அணிகளுக்கும், சிறந்த வீரர்களுக்குமான பரிசில்களும் கிண்ணங்களும் வழங்கிவைக்கப்பட்டதுடன், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களாக நியமனம் பெற்ற டொல்பின் அணியின் உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் உட்பட பல அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# காரைதீவில் சிறப்பாக இடம்பெற்ற சித்தர் குருபூஜை!




காரைதீவு நிருபர் சகா

காரைதீவில் ஜீவசமாதியடைந்த சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 68ஆவது வருடாந்த குருபூஜை காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஜீவசமாதி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பரிபாலன சபைத் தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 51 கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்று, சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவும் இடம்பெற்றது..
சித்தர் குருபூஜை இடம்பெற்று அன்னதானமும் நடைபெற்றது.




















# பூசாரி ஐயா சின்னத்தம்பி நடராசா அவர்களின் இழப்பை முன்நிறுத்தி......

சின்னத்தம்பி நடராசா என்ற இயற்பெயர் கொண்ட களுவங்கேணியைச் சேர்ந்த குமாரர் தெய்வ பூசாரியார் காலமாகிவிட்டார். இவர் பெயர்பெற்ற சித்த வைத்தியரும் ஆவார். 'பூசாரி ஐயா' என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் எங்களுடன் பேரன்புடன் புழங்கும் நடராசா ஐயா பாரம்பரிய அறிவுலகம் தந்திருக்கின்ற பெரும் ஆளுமைகளுள் ஒருவர்.

மட்டக்களப்பு பாரம்பரிய அரங்குகள் சடங்குகள் கொண்டியங்கும் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளின் முக்கியத்துவமும் சமகாலத் தேவைப்பாடும் உணர்ந்து செய்படத் தொடங்கிய 1990களின் கடைக்கூறும் 2000 இன் தொடக்கமும் முக்கியத்துவம் மிக்கவை.

மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழுவின் இயக்கம் பாரம்பரிய அறிவு முறைமைகளின் ஆளுமைகளை அறியவும் அறிவிக்கவும் வாய்ப்பாக அமைந்தது. நவீன அறிவுப்புலத்தில் படிப்பறிவற்றவர்களாக பாமரர்களாக தராதரமற்றவர்களாக நிராகரிக்கப்பட்டவர்கள் அவர்கள். நவீன அறிவுப்புலத்தின் தராதரப்பத்திரங்களைக் கொண்டிராதவர்கள் என்பதால் இந்தக்கதி அவர்களுக்கு உரியதாயிற்று. உண்மையில் இது நவீன அறிவுருவாக்கத்தின் பார்வையற்ற தன்மையும் அதன் விளைவான வளர்ச்சியற்ற தன்மையுமே அன்றி வேறொன்றையும் தந்ததில்லை.

இன்று வரையில் பாரம்பரியமான அறிவுலக ஆளுமைகள் பல்கலைக் கழகங்களுக்குள் அறிவுப்பகிர்வுக்கான ஆசான்களாக அழைக்கப்பட்டதில்லை. அவ்வாறான விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் ஒருசிலவும் பல்கலைக்கழக சமூகத்தின் பலத்த எதிர்ப்புக்கும் விமர்சனத்திற்கும் உரியதாக உக்கிரம் கொண்டிருந்ததும் உண்மை.

பட்டதாரிப் பத்திரமொன்று இல்லாததன் காரணமாக பாரம்பரிய மருத்துவர் முதல் விவசாயி, வணிகர், கலைஞரென எவரும் பல்கலைக்கழகம் உள்ளெடுக்கும் தகுதியை பெறாதபேறு பெற்றவர்கள் ஆயினர். ஆய்வுக்கான தகவல் வழங்கிகளாக இவர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தார்களே தவிர அவர்களது ஆற்றல் ஆளுமை மதிக்கப்பட்டு சம ஆசனமோ, சரியாசனமோ வழங்கப்பட்டதாக வரலாறு இல்லை.

மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழுவின் இயக்கம் பல்கலைக்கழக மாணவர், சமூகமட்டத்தில் இயங்கும் இளைஞர் என இணைந்து கூத்தரங்க அண்ணாவிமார், சடங்குப் பூசாரிகள், பாரம்பரிய வைத்தியர்கள், பாரம்பரிய மகபேற்று நிபுணர்களான மருத்துவிச்சிகள், வெள்ளாமைக்காரர்கள், பட்டிக்காரர்கள், பாரம்பரிய கைத்தொழில் வல்லார் என செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கென மூன்றாவது கண் செய்தி மடல் வெளிக்கொணரப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள் என்பன வெளியிடப்பட்டன. தேசிய தமிழ்ப் பத்திரிகைகளான வாராந்த வீரகேசரி, தினக்குரல் பெருமிடம் தந்திருந்தன. உள்ளூர், தேச, உலக மட்டத்தினாலான அறிஞர்கள், கலைஞர்கள் இணைந்து இந்த உரையாடல்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

அரங்கவிழாக்கள், கலைவிழாக்கள், சிறுவர் திருவிழாக்கள், பொங்கல் திருவிழாக்கள், கைவினை திருவிழாக்கள், பட்டிப்பொங்கல் விழாக்கள், உள்ளூர் உணவுத் திருவிழாக்கள், காட்சிப்படுத்தல்கள், மாநாடுகள், களப்பயிற்சிகள் என இச் செயற்பாடுகள் அமைந்தன.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலைத்திட்டங்கள் மூலமாக 2000ன் முதல் தசாப்த பிற்கூறுகளில் இருந்து உள்ளூர் அறிவுமரபு ஆளுமைகள் பங்கொள்ஆய்வு செயற்பாட்டாளர்களாக, வளவாளர்ளாக, வல்லுணர்களாக உள்ளீர்க்கப்பட்டனர். உள்ளூர், தேசிய உலகமட்டத்தினாலான ஆய்வுகள், ஆற்றுகை அரங்குகள், கலையரங்குகள் என இப்பங்குபற்றல் வலுவடைந்துள்ளது.

சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தில் இச்செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்றதுடன், அதிகாரபூர்வமான வருகைதரு கலைஞர்களாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு செயன்முறையாக பயிற்றும் அண்ணாவிமார்கள் வளவாளரானார்கள்

இத்தகையதொரு சமூகம் சார்ந்த பல்கலைக்கழகம் சார்ந்த இரண்டும் இணைந்த அறிவுருவாக்கப் பயணத்தில் பெரும் கவனிப்பை கோராத எளிமையான தோற்றம் கொண்ட சின்னத்தம்பி நடராசா ஐயா அவர்கள் செயற்பாடுகளாலும் கருத்துக்களாலும் ஆழ்ந்த அறிவனுபவத்தின் அடையாளமாகத் திகழ்ந்தார்.

பாரம்பரிய அறிவுலகம் பற்றி காலனியம் கட்டமைத்த நவீன அறிவுலகத்தின் பொய்யானதும் மோசமானதுமான கருத்துக் கட்டமைப்புக்கள் தகர்ந்து போகச் செய்து வருவதில் ஐயாவின் பங்கு கணிசமானது.

சாதாரண வேட்டி சட்டை, சாரம், சேட் என தோற்றம் கொள்ளும் சின்னத்தம்பி நடராசா போன்ற மனிதர்களின் அறிவாகிருதியின் பரிமளிப்பு பல்கலைக்கழக குறிப்பாக நுண்கலைசார் பட்டதாரி மாணவர்களின் பார்வையில் மாற்றங்களை கொண்டுவந்திருகின்றது என்பது தெளிவான அவதானத்திற்குரியது.

வேடர் சமூக அடையாளம் அவர்களது வாழ்வியல் உண்மைகள், அவர்களது மரபார்ந்த கல்வி, அறிவுமுறைமைகளின் சமகாலப் பயில்வின் தேவை பற்றிய நடராசா ஐயாவின் கருத்துக்கள் அறிவுப்புலத்தில் மட்டுமல்லாது அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமர்வுகளிலும் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டது.

நவீனமயம் என்ற போர்வைக்குள் முக்குளிக்க வைக்கும் காலனிய ஆதிக்கங்கள், அடக்குமுறைகள் என்பன நவ நவமான முறைகளில் நாகரீகம், அபிவிருத்தி என்ற பெயர்களில் மாயப்போர்களை இடையூறாது எதிர்கொண்டுவரும் சூழலில் உயிர்த்துடிப்பும் அறிவாழமும், அனுபவமும், அமைதியும் அன்புப் கொண்ட ஒரு சகபாடியின் இழப்பு ஏற்படுத்தும் மனவலி வார்த்தைகள் அற்றது.

எளிமையும் ஏழ்மையும் கொண்ட பாரம்பரிய அறிவுலகம் மீதான புறக்கணிப்பும் பகட்டும் படாடோகமும் கொண்ட வெற்று நவீன அறிவுச் சமூகத்தையே கட்டி வளர்த்திருக்கிறது என்பது புரியப்படுவதற்கான உடையாடல்கள் எம்முன்னால் நிற்கும் பெரும் தேவைப்பாடு.

கலாநிதி.சி.ஜெயசங்கர்

தொடர்ச்சி...

## டெங்கு நோயாள....

அஸ்பிறின், இஸ்ரிரொயிட் போன்ற மருந்து வகைகளை பயன்படுத்த வேண்டாமென்று அமைச்சு கடுமையான எச்சரிக்கை அறிவித்தலை விடுத்துள்ளது.

தற்சமயம் நிலவும் பருவப்பெயர்ச்சி மழையினால் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களில் டெங்கு நோய் துரிதமாக அதிகரித்திருக்கிறது. அஸ்பிறின் போன்ற மருந்து வகைகளை பயன்படுத்திய டெங்கு நோயாளர்கள் உயிரிழந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன, மேலும் பல நோயாளர்கள் உடல் நிலை மோசமடைந்த நிலையில் உள்ளார்கள்.

அஸ்பிறின், புறூபன், மெத்தனமிக் அமிலம் உட்பட ஸ்ரிரொயிற் மருந்துகளை நோயர்களுக்கு வழங்க வேண்டாமென்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜயசிங்க பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

தொடர்ச்சி...

## 'கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு'

இனவாத ரீதியில் அன்றி இலங்கை தேசியத்தை அடிப்டையாகக் கொண்டு இதற்கு இன்னும் ஓர் இரு தினங்களில் தீர்வு காணப்படும் என்றும் கூறினார். முன்னைய ஜனாதிபதிகளின் காலத்தில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை தற்போதைய ஜனாதிபதியின் கீழ் இதற்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர்களின் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது அமைச்சர் இதனை தெரிவித்தார். சமூகமான ரீதியில் இலங்கை தேசியத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டிய இந்த பிரச்சினை இனவாதமாக சித்தரிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

கல்முனை வடக்கிற்கு உட்பட்டதாக 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உண்டு. இதே போன்று கல்முனை தெற்கிற்கு உட்பட்டதாக 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உண்டு. இதற்கு மேலதிகமாக 8 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளன. இவற்றை எந்த பகுதியுடன் இணைப்பதுதான் தற்பொழுது உள்ள பிரச்சினை ஆகும்.

கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணும் பொருட்டு நேற்று இரவு சம்பந்தப்பட்ட கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் தீர்வை எட்டமுடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக்க கலுவேவ, பிரதமர் ஆலோசகர் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 9

## இராஜதுரையின் கல்லுப் பிள்ளையார் கோவிலடியும் மாதா சொரூபத்தை வரவேற்ற மட்டக்களப்பின் மூவின மக்களும்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 9)*

ராஜதுரை அண்ணரின் தேத்தண்ணீர்க்கடை சீலாமுனையிற் பிரசித்தமான ஓர் தேநீர்க்கடை. தங்கள் வீட்டில் என்னதான் தேநீர் அருந்தினாலும் அவர் கடையில் வந்து, அங்கு தேநீர் போடும் பண்டாவின் கைத் தேநீர் அருந்தினால்தான் கிராமத்தில் பலருக்கு மனம் நிறையும். காலையில் பல தொழில்களுக்கும் செல்லும் பல ஆண்களால் அக்கடை நிறைந்துபோயிருக்கும், பண்டாவின் தேநீர் கோப்பையைக் காத்துக்கொண்டு பலர் நிற்பது வழக்கம்

இந்த இராஜதுரையின் பூர்வீகம் கொக்கட்டிசோலை, மாமாங்கப்பிள்ளையார் கோவிலின் குருக்களின் உதவியாளர் ஆசாரமானவர் மரக்கறி உணவினர். குருக்களுக்குப் பூசைச் சாமான்கள் எடுத்துக்கொடுப்பது, சூரன் போரின்போது சூரன் சிலை அருகில் நின்று அவனுடைய உடைகளைக்களைவது ஆயுதங்களைக் களைவது, சூரன் தலையைப் பல பக்கங்களிலும் திருப்புவது, இறுதியில் சாய்ப்பது என்பன அவர் செயல்கள். இவற்றால் சிறுவர் மத்தியில் அவர் ஒர் ஹீரோவாகியிருந்தார். அவர் எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு தேநீர்க்கடை வைத்திருந்தார். அவரே அதன் உரிமையாளர்.

தோசை வடை சுடுவதில் விண்ணர், அதை அவர் எங்கு கற்றாரோ தெரியாது, அவரது தேநீர்க்கடை எங்கள் வீட்டுக்கு முன்னால் இருந்த பெரியதொரு ஆலமரத்தின் அருகில் அமைந்திருந்தது. அதில் நான் முன்னர் குறிப்பிட்ட பண்டா என்றொரு சிங்கள இனப்பையன் 20 வயதிருக்கும்; தேத்தண்ணி போடுபவனாக இருந்தான். அவனது தேநீர் வெகு பிரசித்தம் அத்தனை சுவை. பண்டா அண்ணன் என்றே அவரை அழைப்போம். நன்றாகத் தமிழ் பேசுவார். சிங்களவர் என்று மதிக்கவே முடியாது, இரவில் ஒன்பது மணிக்குக் கடை பூட்டப் பட்டு விடும் சில நேரங்களில் பண்டா வீட்டுக்கு வருவார். அம்மாவுடன், என்னுடன் கதைத்துக் கொண்டிருப்பார். தமிழ் தெரிந்தவராகையினால் தமிழரசுக்கட்சியினரின் சிங்கள எதிர்ப்புக் கதைகளால் ஒரு புறம் கோபமும் ஒரு புறம் துக்கமும் பயமும் கொண்டிருந்தார்.

தன் உணர்வுகளை அம்மாவுடன் பகிர்ந்து கொள்வார். அவருக்கு இரண்டு தம்பிமாரும் ஒரு தங்கையுமிருந்தனர். அவர்களுக்காகவே அவர் கடையில் வேலை செய்ய வெலிமடையில் இருந்து வந்திருந்தார். அம்மா அவருக்குத் தேநீர் தருவார். நல்ல கறிகள் ஆக்கியிருந்தால் பண்டாவுக்கு இரவு விருந்தும் அளிக்கப்படும். பண்டா அம்மாவுக்கு இன்னொரு பிள்ளையானார்.



கடையின் முன்னால் இருந்த ஆல மரத்தின் கீழ் ஒரு உருண்டைக்கல் வைக்கப்பட்டு, அது பிள்ளையாராக உருவகிக்கப்பட்டு, அதற்குத் திரி புண்டரமாகத் திருநீறு பூசப்பட்டு, அதனிடையே சந்தனம் குங்குமப்பொட்டிட்டு, ஒரு மாலையும் போடப்பட்டு அதற்கு விளக்கும் ஏற்றப்பட்டது.

தினமும் மாலை வேலைகளில் பூசை நடைபெறும். இரண்டொருவர் பூசை வேளைகளில் கூடுவர். ஆனால், அங்கு, பொங்கல் நடைபெறும் நாட்களில் அதிகமானோர் கூடுவர். பெரும்பாலோனோர் சிறுவர், சிறுமியராக இருக்கும். அவ்வொன்றுகூடல் இறை வணக்கமாக அன்றி ஒரு கொண்டாட்டமாகவே இருக்கும். ஆலமரத்தடியில் அமர்ந்திருந்த கல்லுப் பிள்ளையாருக்கு முன்னால் நான்கு தென்னம் கட்டைகள் போடப்பட்டு அதற்குள் குருத்து மண் நிரப்பி ஆட்கள் அமர்ந்திருந்து கதைக்கும் இடமாக அதனை ஆக்கியிருந்தார் ராஜதுரை அண்ணர்.

புசு புசு என்ற காற்று, ஆலமர நிழல், குருத்து மணல் ஓடர் பண்ணினால் பண்டாவின் சுவையான தேநீர்- இதனை விட வேறு என்ன சுகம் வேண்டும்?

பேப்பர் வாசித்தல், அரசியல் பேசுதல், ஊர்த் தொளாபரங்களை அலசுதல் என்பன இந்நான்கு கட்டைகளுக்குமிடையில் குருத்து மண்ணில் நடை பெறும். ஆண்களே அங்கு கூடுவர். என் தந்தையைப் பெரும் பாலும் இங்குதான் காணலாம். அவர் நட்சத்திரங்கள் மத்தியில் சந்திரன் போல அங்கு வீற்றிருப்பார். அனைவரும் அவர் மீது பெரு மரியாதை வைத்திருந்தனர். அவர் இந்த இராஜதுரையின் மிக நெருங்கிய நண்பர். இடைக்கிடை பொங்கல், படையல் என்பன பிள்ளையாருக்கு நடைபெறும். பூசைகளை ராஜதுரை அண்ணனே செய்வார். அப்பா உதவி செய்வார்.

இக்கடைக்கு 300 யார் தொலைவில் டேவிட் சிங்கோ எனும் பெயர் கொண்ட சிங்கள முதலாளியின் கல் உடைக்கும் ஆலை இருந்தது.

கல் மண் விற்றலும் கொழும்புக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதும் அவர் தொழில். ஊரில் மிகப் பிரசித்தமானவர் டேவிட் சிங்கோ முதலாளி. அங்கு லொறி சாரதியாக இருந்த பியதாசா எனும் சிங்களவர் ராஜதுரையின் கடைக்கு அடிக்கடி வரும் ஒருவன். பிள்ளையார் பூசையிலும் கலந்து கொள்வான் அவனுக்கு அந்தப்புக்கையும் மோதகமும் மிக மிகப்பிடிக்கும். சுவைத்துச் சாப்பிடுவான் நன்றாகத் தமிழ் பேசுவான்.

அதிகாலை ஐந்து மணிக்கு ஆலமரத்தடிப்பிள்ளையார் கோவிலில் ராஜதுரை அண்ணன் கிலுக்கும் மணியும் பாடும் தேவாரப் பாடல்களும் கேட்டு நான் கண் விழிப்பதுண்டு. அங்கு வாழ்ந்த சகல சமூக மக்களும் நான் முன் சொன்ன பியதாசவும் அப்பூசைகளில் கலந்து கொண்டு திருநீறு, சந்தனம், குங்குமம் அணிந்து எம்மைப்போலச் சைவமாகக் காட்சியளிப்பார். பொங்கல், புக்கை, மோதகம் எல்லாம் சாப்பிடுவார். பண்டாவும் மகிழ்சியோடு கலந்து கொள்வார். அவரும் அவ்வண்ணமே பொங்கல் புக்கை மோதகம் சாப்பிடுவார். பியதாசாவும் பண்டாவும் சில வேளைகளில் சிங்களத்தில் உரையாடுவர் எம்முடன் தமிழில் உரையாடுவர்.

வெசாக் காலங்களில் டேவிட் சிங்கோ வீட்டிலும் அவர் மதில்களிலும் வெசாக் கூடுகள் தொங்கும். பியதாசாவும், பண்டா அண்ணனும் வெள்ளையுடை அணிந்து மட்டக்களப்புப் பட்டணத்தில் அமர்ந்திருந்த பாஞ்சாலையான மங்கள ராமயாவுக்குச் செல்வார்கள். நாங்களும் அம்மா அப்பா, பெத்தாச்சி தங்கை அக்கா, உறவினர் புடை சூழ மங்கள ராமயா செல்வோம். கோவில் வளாகத்தில் பலவகை மலர்களை அடுக்கி வைத்திருப்பர். அவற்றைக் கொண்டு சென்று புத்த பகவானின் காலடியில் வைத்து வணங்குவோம். பிரமாண்டமான புத்தர் சிலை அது. எமது சூரன் சிலைபோலத்தான். நிறமும் உருவும். ஆனால் சூரன் சிலையில் தெரியும் கோபமும் குரூரமும் அதில் இல்லை. 'சாந்தமும்,அமைதியும் அதில் தவழும். புத்த பெருமான் சிலை எனது சிறு வயதிலேயே எனக்குப் பிடித்தமான சிலையாகிவிட்டது.

காணிக்கை மாதா மூன்று சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த கதை அன்று மக்கள் மத்தியில் காட்டுத் தீபோல பரவி இருந்தது. அது சம்பந்தமான பல கலண்டர்கள் வெளியாகியிருந்தன.

மூன்று சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த அம் மாதாவின் சிலயொன்றை மன்னாரிலிருந்து நாடுபூராவும் ஊர்வலமாகக் கொண்டுவர கத்தோலிக்க திருச்சபை முடிவெடுத்திருந்தது. அமிர்தகளியில் இருந்த கப்பலேந்தி மாதா கோவிலுக்கு அச்சிலை எடுத்துச் செல்லப்பட வேண்டியிருந்தது. முகத்துவார வீதிக்கூடாக முகத்துவாரத்தின் கடைசித் தொங்கலில் இருந்த கப்பலேந்தி மாதா கோவிலுக்கு அந்த மாதா சொரூபம் கொண்டு செல்லப்பட வேண்டும். சீலாமுனையையும் இந்தப் பிள்ளையார் கோவிலையும் தாண்டித்தான் அது செல்ல வேண்டும்

சீலாமுனையில் அம்புரோஸ் என்ற ஒரு கிறிஸ்தவர் இருந்தார். இவர் மன்னாரைச் சேர்ந்தவர். அங்கிருந்து இங்கு வந்து எமது சொந்தக்காரி ஒருத்தரைத் திருமணம் செய்திருந்தார். பிள்ளையார் கோவில் மண்குவியலுக்கு அடிக்கடி வந்து பண்டாவின் தேநீர் சுவைத்துச் செல்வதில் ஒருவர் இந்த அம்புரோஸ்.

அந்த அம்புறோஸ் தலைமையில் மாதா சொரூபத்தை வரவேற்க




சீலாமுனை மக்கள் ஆயத்தமாயினர். மாமாங்கம் கோவிலில் ஐயருக்கு உதவியாளராயிருக்கும் ராஜதுரை, நரசிங்க வைரவர் கோவிலில் மந்திரம், காவியம் பாடும் கிருஸ்ணபிள்ளை, பௌத்த மதத்தினரான பியதாஸ, பண்டா அண்ணர் அனைவரும் இணைந்து மாதாவை வரவேற்க வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

ஊருக்குள் பாய் விற்கும் கிறீன் காக்காவும் ஊருக்குள் கடைவைத்திருந்த முகமதுவும் கூட இதற்குப் பணம் கொடுத்தனர்.

மேரி மாதா எல்லோருக்கும் மாதாவானாள்

ஒரு மைல் நீளத்துக்கு குருத்தோலைச் சோடனை. விடிய விடிய இருந்து அனைவரும் உழைத்தனர். கடதாசிகளாலும் குருத்தோலைகளாலும் சீலாமுனை களைகட்டிப் போயிருந்தது.

மாதா சொரூபம் வர அனைத்து மதத்தினரும் நின்று வணங்கி வரவேற்றனர்.

சமய பேதம், சாதிபேதம், இனபேதம் இல்லாது அனைவரும் இணைந்திருந்த அற்புத காலங்கள் அவை.

இந்த அற்புத இணைப்பில் மண்ணை வாரிப்போட்டது 1956 ஆம் ஆண்டு இனக் கலவரம். அதனால் முறிந்த உறவுகளை அடுத்துப்பதிவேன்.

(தொடரும்)

# இமாலய சாதனை புரிந்த "தேனகச் செம்மல்" செ.இராஜதுரை

*அத்தியாயம்-12*



**பேச்சுத்துறையில் இராஜதுரை**

சொல்லுக்கு சொல்லினிக்கும் சொல்லிய சொல்லனைத்தும் // ஒல்லுவகையே நவிலும் உட்படுத்தும் நல்ல தமிழை நானிலம் கேட்டு நிற்கும் நன்நிலமெங்கும் சீர் மணக்கும் நாவலர் ராஜதுரை நற்றமிழென்றோது. (நீதிவாக்கியர்)

காதுகளால் கேட்டதை கண்களால் பார்ப்பதை உள்ளங்களில் உதிக்கின்ற உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த வாயும் அதனுள் அசைகின்ற நாவும் மிக மிக அவசியமாகிறது. பேச்சுத் தன்மை உள்ளவர்களால் வெளிப்படுத்தப்படுகின்ற சொற்கள் சரியான முறையிலும் அழகாகவும் இனிமையாகவும் பேசப்படுகின்ற விடயம் கேட்பவர்களை மகிழ்ச்சிப்படுத்தவும். பேசும்போது கிரகித்து வைத்திருக்கும் இருப்புக்களை மூளை சிந்தித்து கொடுக்கின்ற விடயத்தை அசைகின்ற நாவழியாக வெளிப்படுத்தும் வேளை நளினமாகவும் அலங்காரமாகவும் இடத்துக்கு ஏற்றவாறு சமயோசிதமாகவும் இருந்தால் பேசுகின்ற பேச்சை கேட்பவர்களுக்கு மிகவும் பிடித்துப் போகும். இதற்கு சொல்வளமும் நாப்பழக்கமும் வேண்டும். அதனால்தான் செந்தமிழும் நாப்பழக்கம் என்றார்கள் முன்னோர்கள்.

மேற்காட்டிய வழி முறைகளுக்கு மேலாகவும் தெளிந்த நீரோடை அசைந்து ஓடுவதுபோலவும் 'சொல்லின் செல்வன்' என மக்களால் அன்பொழுக அழைக்கப்பட்ட இராஜதுரையின் செந்தமிழ்ப் பேச்சு அமைந்திருக்கும். அவரின் பேச்சை கேட்டு அவரைப் பாராட்டியவர்களில் சிலரின் குறிப்புக்களை படித்து விட்டு அவரின் பேச்சுக்குப் போவோம்.

தமிழரசுக்கட்சியின் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம். திரு.இராஜதுரை அவர்களை நான் வெகுகாலமாக அறிவேன். அவர் ஆற்றல்மிக்க ஓர் எழுத்தாளர்.அரசியலில் ஈடுபட்டு முழு மூச்சாக வேலை செய்து வந்தவர். மட்டக்களப்பு யாழ்ப்பாண ஒற்றுமைக்கு வித்திட்டவர். கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கொள்கைகளைப் பரப்பவும் பலம் வாய்ந்த சக்தியாக விளங்கியவர். மட்டக்களப்பில் இருந்து தமிழரசுக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை அவருக்கே உண்டு. 'திரு.இராஜதுரை சிறந்த பேச்சாளர்'அவரின் பேச்சில் இனிமை கலந்திருக்கும். பொது மக்களைத் தன்னுடன் வயப்படுத்தும் வல்லமையுள்ளவர். எங்கள் இயக்கத்தில் இருந்த பேச்சாளர்களில் இவருக்குத் தனியான புகழுண்டு. இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

கவிச்சுடர் அன்பு முகைதீன் கல்முனையைச் சேர்ந்த கவிச்சுடர் அன்பு முகைதீன் அவர்கள் இராஜதுரையவர்களை புகழ்ந்து பாடிய பதினைந்து பரா கொண்ட கவிதையில் நான்கு பராக்களை மட்டும் உங்கள் பார்வைக்குத் தருகிறேன்.

எழுத்தாலும் பேச்சாலும் இளைஞர்களின் நெஞ்சுகளில் அழியாதஓர் இடத்தை அண்ணன் பிடித்துள்ளார். தமிழகம் இது அவர் தந்தவொரு பத்திரிகை அந்த இதழில் அவர் பொழிந்த கருத்துக்களில் நெஞ்சைப் பறி கொடுத்தோம் நிமிர்ந்து அவர் பின்னால் அஞ்சாது நாங்கள் அணிதிரண்டு பின் தொடர்ந்தோம்.

அண்ணன் மேடையிலே அமர்ந்திருந்தால் ஓர் அழகு மன்னன் சோழன் மறுபிறவி எடுத்து வந்து முன்னே அமர்ந்து முறுவலித்தல் போலிருக்கும் கொட்டும் மழைக்குள்ளும் கொதிக்கின்ற வெயிலுக்குள்ளும் கை கட்டி உரை கேட்க காத்திருப்போம் நாங்களெல்லாம் தேன் அருவி பாய்வது போல் தீந்தமிழை அவர் சொரிவார் ஆண்கள் மட்டுமல்ல அணங்குகளும் அதில் குளிப்பார்.

அண்ணர் இராஜதுரை அழகிய காவியம் காவியத்தைத் தங்கள் கரங்களிலே ஏந்தி வைத்து படிப்பவர்கள் உள்ளத்தை பறி கொடுக்கத் தவறார்கள். மறுப்பவர்கள் இருந்தால் மண்டையிலே கோளாறு இருப்பதுவாய் சொல்வேன் இதிலேன்ன சந்தேகம்நாளை இந்த நாயகனின் நயம் மிகுந்த காவியத்தை வாழுங் கவிதை வரிகளிலே சிறைப்பிடிக்க சத்தியத்தை ஒரு போதும் சாகடிக்க விரும்பாத புத்தியுள்ள புலவர் குலம் புறப்பட்டு வாருங்கள். என்று அவர் எழுதியிருந்தார். எழுச்சிக் கவிஞர் இரா.தவராஜா

**கலாபூசணம் அரங்கம்**
**இரா. தவராஜா**

16.06.2013 ஞாயிற்றுக்கிழமை தேவநாயகம் மண்டபத்தில் இராஜதுரையவர்களின் பேச்சுப் புத்தகமான பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் மூன்றாம் பதிப்பு வெளியீட்டு விழாவில் தலைமையுரையாற்றிய இரா.தவராஜா ஆற்றிய உரை.

அண்ணர் இராஜதுரை சிறந்த நடிகர் சிறந்த கதாசிரியர் சிறந்த எழுத்தாளர் சிறந்த பேச்சாளர் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் இவரின் திறமைகளை. பணம், பட்டம், படிப்பு, பதவி, பகட்டு போன்ற புகழுக்கான சாதனங்கள் கொண்டவர்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் பண்பு பணிவு பகுத்தறிவோடுபக்தி பதட்டமற்றதெளிவு பணியில்பக்குவம் பரிவின்வித்தகம் என்ற குணங்களை அளவு கோலாகக் கொண்டு மனிதர்களைத் தேடினால் அதன் முன்வரிசையில் சுட்டிக்காட்டுகின்ற இடத்தில் இருப்பவர் சொல்லின் செல்வன் அண்ணர் இராஜதுரை அவர்கள்தான.

இராஜதுரையவர்கள் தமிழ் சமுதாயத்துக்கு கிடைத்த சிறந்த தலைவர்களில் ஒருவர். இது ஏதோ உற்சாக மிகுதியினால் உணர்ச்சி வேகத்தினால் உதிர்கின்ற வார்த்தையல்ல உண்மையும் இதுவேதான்.

எத்தனையோ? விற்பன்னர்கள் வித்தகர்கள் நம்மிடையே தோன்றியிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவராவது அண்ணரைப் போல மக்களின் இதயங்களை கவர்ந்தவர்களில்லை.

எங்கிருந்து இந்தப் பேராற்றலைப் பெற்றார் என்பதுதான் இன்றுவரை விடை காணத்துடிக்கும் வினா?
அண்ணருக்கு ஈடு இணையில்லை நாடகப் பெரும் புலவன் சேக்ஸ்பியர் தன்நாடகத்தில் வரும் கதைத்தலைவியை வர்ணிக்கும் போது காலமோ? வயதோ? அவளது அழகின் எண்ணற்ற வர்ணஜாலங்களை எதுவும் செய்து விட முடியாது என்றான்.

அவன் மட்டும் அண்ணர் காலத்தில் வாழ்ந்திருந்தால் அண்ணனின் எழுத்தின் எண்ணற்ற வர்ண ஜாலங்களை எதுவும் செய்து விட முடியாது என்றுதான் எழுதியிருப்பான்.

இதோ ஒரு கால்ஸ்வொர்த்தி இதோ ஒரு இப்சன் இதோ ஒரு பெர்ணாட்சா என்று அண்ணரைச் சுட்டிக்காட்டி காலஞ் சென்ற தலைவர் இராசமாணிக்கம் அவர்கள் கூறினார்கள்.

அண்ணரை என்னவென்று புகழ்வது இங்கர்சால் என்றொரு ஆங்கிலச் சொல்லின்செல்வன் இருந்தானாமே அவன் அண்ணர் காலத்தில் வாழ்ந்திருந்தால் அண்ணரின் பேச்சு நடையழகை பயில தேனகம் வந்து போயிருப்பான்.

மயான பூமியை விட்டு எழுந்து வரக்கூடிய சக்தியிருந்திருந்தால் பர்க் என்கின்ற பாராளுமன்ற வித்தகன். அண்ணர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளைக் கேட்பதற்கு நமது பாராளுமன்றப் படிக்கட்டுகளில் மணிக்கணக்காக தவம் கிடந்திருப்பான்.

எங்கே கற்றார் இந்த லலிதத்தை எங்கே பெற்றார் இந்த லாவண்யத்தை எங்கே தேடிக் கொண்டார் இந்த நளினத்தை என்று அவன் வாயடைத்து மயங்கிப் போயிருப்பான்.

அண்ணருக்கு இவைகளினால் மட்டும் பெருமையல்ல. சிதறுண்டு போய் கிடந்த இன உணர்வுக்கு உருவம் தந்தார். உருவம் தந்ததோடு அந்த உணர்வின் சின்னமாகவும் விளங்கினார்.

அந்த காலத்தில் ஆழ்ந்துகிடந்த இனத்திற்கு அகல் விளக்கு யாரும் ஏற்ற மாட்டார்களா? என ஏங்கிக் கிடந்த போது அண்ணர் அவர்கள் அந்நேரத்தில் ஒளிமயமாகத் தோன்றினார்கள்.

காலத்தின் புழுதி படிந்த சரித்திரச் சான்றுகளை அண்ணர் எடுத்துக் காட்டியதால். இந்த வரலாற்றுச் சிறப்புகள் அன்று வாழ்ந்த இளைஞர் சமுதாயத்தில் மின்சாரம் பாய்ந்தது போன்று எழுச்சியை ஏற்படுத்தியது.

(தொடரும்)

**அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!**
**கால்பக்கம் - ரூபா 2500**
**அரைப்பக்கம் - ரூபா 5000**
**முழுப்பக்கம் - ரூபா 10,000**
**சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே**

அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
Whats App
தொடர்பு : +44 7437665259
arangamnews@gmail.com

# கற்போம்

## விஞ்ஞானம்


குணம் சவரிராஜா

இணை ஆட்சி (Codominance)
சில இயல்புகளில் இதரநுகநிலையில், இரு எதிருருக்களினதும் வெளிப்பாடு, தோற்றவமைப்புக்குச் சமமான பங்களிப்பை வழங்குகின்றது. இத்தகைய தோற்றப்பாடு இணையாட்சி என அழைக்கப்படும்.

உதாரணமாக, AB குருதிக்கூட்ட வகையைச் சேர்ந்த ஒரு நபர் ஒரே நேரத்தில் செங்குழியங்களின் மேற்பரப்பில் A மற்றும் B ஆகிய காபோவைதரேற்றுக்களைக் கொண்டு காணப்படுவார். இரண்டு காபோவைதரேற்றுக்களும் ஒரு தனியான பரம்பரையலகின் IA மற்றும் IB எதிருருக்களினால் குறிப்பிட்ட நொதியங்களால் செங்குழியத்தின் மேற்பரப்புக்குச் சேர்க்கப்படும். இதரநுகமுள்ள ஒரு நபர் இரண்டு காபோவைதரேற்றுக்களையும் (IAIB) சமமானதொரு முறையில் வெளிப்படுத்துவார்.

அதேபோன்று,
IA எதிருருவுக்கான சமநுகங்கள் (IAIA) செங்குழியத்தின் மேல் A காபோவைதரேற்றை மட்டும் காவும்.
IB எதிருருவுக்கான சதநுகங்கள் (IBIB) செங்குழியத்தின் மேல் B காபோவைதரேற்றை மட்டும் காவும்

கீழே காண்பிக்கப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு எதிருருவுக்குமான இரண்டு சமநுகமுள்ள நபர்களின் சேர்க்கையின் பெறுபேறாகத் தோன்றும் F1 தோன்றல், AB குருதிக்கூட்ட வகையை மாத்திரம் உடைய தனியன்களைக் கொண்டிருக்கும். F1 தோன்றலுக்கிடையே அல்லது AB எதிருருக்களுக்கான இதரநுகமுள்ள தனியன்களுக்கிடையே நிகழக்கூடிய சாத்தியமான சேர்க்கையால் உற்பத்திபண்ணப்பட்ட F2 சந்ததி, குருதிக்கூட்டம் A:AB:B ஆகியவற்றை 1:2:1 என்ற விகிதத்தில் மூன்று தோற்றவமைப்புக்களை உற்பத்திபண்ணும்.




உரு 6.10. ABO குருதிக் கூட்டமாக்கலில் இணையாட்சி

காண்பிக்கப்பட்டவாறு, F2 தோற்றவமைப்பு விகிதங்கள், நிறைவில் ஆட்சி மற்றும் இணை ஆட்சி ஆகிய இரண்டிலும் 1:2:1 ஆக உள்ளது. எனவே F2 தோற்றவமைப்பு விகிதங்களைப் பயன்படுத்தி இரண்டு தோற்றப்படுகளையும் வேறுபடுத்தியறியமுடியாது.

நிறைவில் ஆட்சியையும் இணை ஆட்சியையும் வேறுபடுத்தியறிவதற்கான சாவி யாதெனில், நிறைவில் ஆட்சியில் F1 சந்ததி, இரு பெற்றோர்களிலும் இருந்து வேறுபடும் ஒரு வேறுபட்ட தோற்றவமைப்பைக் காட்டுகிறது. ஆனால் இணை ஆட்சியில் F1 சந்ததி இரு பெற்றோர்களினதும் இயல்புகளை ஒன்றாகக் காட்டுகிறது.

பல்லெதிருருத்தன்மை (Polyallelism) (மடங்கு எதிருருக்கள் (Multiple alleles)
ஒரு தனியான பரம்பரையலகுத் தானத்துக்குப் பல எதிருருக்கள் அமைந்து காணப்படுவதை பல்லெருருத்தன்மை குறிக்கின்றது. இது இரண்டுக்கும் கூடுதலாக எதிருரு வகைகளின் சேர்க்கையால் சில இயல்புகள் தீர்மானிக்கப்படும் ஒரு தோற்றப்பாடாகும்.
உ.ம். மனிதரில் ஒரு தனியான பரம்பரையலகுத் தானத்திற்கு IA, IB மற்றும் I என அழைக்கப்படும் மூன்று எதிருருக்கள் உள்ளன. இவை வெவ்வேறு சேர்க்கைகளில் ABO குருதிக்கூட்டங்களைத் தீர்மானிக்கின்றன. எந்தவொரு இருமடியமான நபரிலும், பல எதிருருக்களில் இரண்டு மாத்திரம் அமைந்து காணப்படும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று எதிருருக்கள் IA Ak; IB Ak; செங்குருதிக்குழிய மேற்பரப்புகளுக்கு A மற்றும் B காபோவைதரேற்றுக்களைச் சேர்க்கும் நொதியங்களைக் குறிப்படுத்துகின்றன. இரண்டு எதிருருக்களும் ஓர் இணை ஆட்சியான உறவில் அமைந்துள்ளன. எவ்வாறாயினும் செங்குழிய மேற்பரப்பில் இந்தக் காபோவைதரேற்றுகள் இல்லாதிருப்பதை எதிருரு i ஏற்படுத்துகின்றது. அத்துடன் அது IA மற்றும் IB ஆகிய எதிருருக்களுக்குப் பின்னிடைவாகவும் உள்ளது. ஆகவே IAi மற்றும் IBi பிறப்புரிமையமைப்புகள் ஆட்சியான தோற்றவமைப்புக்களை உற்பத்திபண்ணுகின்றன. அதாவது A அல்லது b காபோவைதரேற்றைக் கொள்கின்றன. காபோவைதரேற்றுக்களின் எந்தவொரு வகையையும் கொண்டிராத பின்னிடைவான இயல்பு ii பிறப்புரிமையமைப்பினால் பெறப்படும்.

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

### ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்த்தல்

- இரண்டு தெரியாக் கணியங்களைக் கொண்ட இரு சமன்பாடுகள், ஒருங்கமை சமன்பாடுகள் எனப்படும்.

**1.** ஒரு புத்தகத்தினதும் இரண்டு கொப்பிகளினதும் விலை ரூபா 110 ஆகும். இரண்டு புத்தகங்களினதும் மூன்று கொப்பிகளினதும் விலை ரூபா 190 ஆகும். ஒரு புத்தகத்தின் விலை ரூபா $x$ எனவும் ஒரு கொப்பியின் விலை ரூபா $y$ எனவும் கொண்டு, இரு சமன்பாடுகளை அமைத்து ஒரு புத்தகத்தினதும் ஒரு கொப்பியனதும் விலைகளைக் காண்க.

ஒரு புத்தகத்தின் விலை ரூபா $x$ என்க.
ஒரு கொப்பியின் விலை ரூபா $y$ என்க.

$x + 2y = 110 \longrightarrow (1)$
$2x + 3y = 190 \longrightarrow (2)$

(1) x 2 $\quad 2x + 4y = 220 \longrightarrow (3)$
(3) - (2) $\quad (2x + 4y) - (2x + 3y) = 220 - 190$
$2x + 4y - 2x - 3y = 30$
$y = 30$
**$y = 30$ஐ சமன்பாடு (1)இல் பிரதியிடுக.**

$x + 2y = 110$
$x + 2 \times 30 = 110$
$x + 60 = 110$

$x + 60 - 60 = 110 - 60$ (இரு பக்கங்களிலும் 60ஐக் கழிக்க.)
$x = 50$

ஒரு புத்தகத்தின் விலை ரூபா 50 . ஒரு கொப்பியின் விலை ரூபா 30

**2.** ஒரு பாடசாலையில் சுற்றாடற் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மரம நடுகை நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றிய விபரம் பின்வருமாறு:

மாணவர்கள் ஒவ்வொருவரும் ரூபா 100ஐயும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ரூபா 400ஐயும் இட்டு ரூபா 9800ஐச் சேர்த்தனர். அப்பணத்திற்கு 324 மரக்கன்றுகள் வாங்கப்பட்டன. ஒரு மாணவனுக்கு 6 மரக்கன்றுகள் வீதமும் ஓர் ஆசிரியருக்கு 2 மரக்கன்றுகள் வீதமும் நடுவதற்காக வழங்கப்பட்டன.

ஒரு மாணவனை $a$ எனவும் ஓர் ஆசிரியரை $b$ எனவும் கொண்டு, ஒருங்கமை சமன்பாடுகளை அமைத்து மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் எண்ணிக்கைகளைக் காண்க.

$100a + 400b = 9800 \longrightarrow (1)$
$6a + 2b = 324 \longrightarrow (2)$

(2) x 200 $\quad 1200a + 400b = 64800 \longrightarrow (3)$
(3) − (2) $\quad (1200a + 400b) - (100a + 400b) = 64800 - 9800$
$1200a + 400b - 100a - 400b = 55000$
$1100a = 55000$
$\frac{1100a}{1100} = \frac{55000}{1100}$ (இருபக்கங்களையும் 1100ஆல் வகுக்குக)
$a = 50$

**$a = 50$ சமன்பாடு (2)இல் பிரதியிடுக.**

$6a + 2b = 324$
$6 \times 50 + 2b = 324$
$300 + 2b = 324$
$300 - 300 + 2b = 324 - 300$ (இரு பக்கங்களிலும் 300ஐக் கழிக்க.)
$2b = 24$
$\frac{2b}{2} = \frac{24}{2}$ (இருபக்கங்களையும் 2ஆல் வகுக்குக)
$b = 12$

மாணவர்களின் எண்ணிக்கை **50** . ஆசிரியர்களின் எண்ணிக்கை 12

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 46

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

தமிழ்மொழியும் இலக்கியமும் I இல் பழமொழிகள் தொடர்பாக இரண்டு வினாக்கள் வருவதுண்டு. அவை தொடர்பாகக் கவனம் செலுத்துவோம்.

புதிய பாடத்திட்டத்துக்கமைவாகத் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்கான முதலாவது பரீட்சை 2016இல் நடைபெற்றது. நாம் 2017இல் நடைபெற்ற பரீட்சைக்குரிய வினாத்தாளில் வந்த பழமொழிகள் தொடர்பாக வந்த இரண்டு வினாக்களையும் எடுத்துக்காட்டுக்காக இங்கே பார்ப்போம்.

15. தங்களைச் சார்ந்தவர்களின் குறைகள் பொருட்படுத்தப்படுவதில்லை என்பதை உணர்த்தும் பழமொழி
(1) இக்கரைக்கு அக்கரை பச்சை.
(2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
(3) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
(4) தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்.

16. காலத்தே பயிர்செய் என்ற பழமொழியின் கருத்து
(1) பயிரிடுவதற்கென்று காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
(2) உரிய காலத்தில் எதையும் செய்துவிட வேண்டும்.
(3) பருவ காலங்கள் பயிர்செய்கைக்கு உகந்தவை.
(4) காலந் தவறிப் பயிர் செய்தால் விளைச்சல் குறையும்.

இவ்வாறு 2016இல், 2018இல், பழமொழிகள் தொடர்பாக வந்த இரண்டு வினாக்களையும் கவனத்திற்கொள்ளுங்கள்.
இங்கு வந்த வினாக்களைக் கவனியுங்கள்.

(1)பழமொழியின் கருத்துத் தரப்பட்டு, அக்கருத்தை உணர்த்தும் பழமொழியை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(2)பழமொழி தரப்பட்டு, அப்பழமொழி உணர்த்தும் கருத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.
•ஒரு பழமொழிக்கு ஒத்த இன்னொரு பழமொழியை இனங்காணும் ஆற்றலையும் பெற்றிருப்பது நல்லது.

01. ‘இலையும் பழுப்பும் எங்கும் உண்டு’ என்பதை ஒத்த இன்னொரு பழமொழி
(1) நல்ல மரத்து ஒரு புல்லுருவி.
(2) காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்.
(3) வீட்டுக்கு வீடு வாசற்படி.
(4) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

02. ‘அலை மோதும் போதே தலை முழுகு’ என்பதை ஒத்த இன்னொரு பழமொழி
(1) குறை குடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது
(2) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(3) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
(4) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

03. திருப்தி அற்ற மனம் என்பதை உணர்த்தும் பழமொழி
(1) இக்கரைக்கு அக்கரை பச்சை
(2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
(3) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
(4) கழுதை அறியுமா கற்பூர வாசனை

04. பிழையான வழியிற் செயற்பட்டால் மனச்சாட்சி உறுத்திக்கொண்டேயிருக்கும் என்பதை உணர்த்தும் பழமொழி
(1) உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே.
(2) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
(3) தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் காய்ச்சலும்.
(4) ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்.


05. ‘பேராசை பெருந் தரித்திரம்’ என்ற பழமொழியின் கருத்து
(1) பேராசை கொண்டு வாழ்ந்தால் பெரும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.
(2) ஆசைக்கு அளவில்லை என்பதால் பேராசைகொள்வதிற் பிழையில்லை.
(3) மிதமிஞ்சிய ஆசைகொள்பவர்களின் வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடும்.
(4) அளவோடு ஆசைகொள்பவர்களிடம் ஒரு போதும் வறுமை வரவேவராது.

06. உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்ற பழமொழியின் கருத்து
(1) உப்பு, நாமுண்ணும் உணவுக்குச் சுவை தருவது என்பதை நினைத்துக்கொள்.
(2) உப்பு, உப்பாகக் குறிக்கப்படாமல் சோற்றைக் குறிக்கிறது என்பதை நினைப்பாயாக.
(3) உணவுக்கு உப்பு அவசியம் என்பதால் உப்பிட்டவரை நாம் நினைக்க வேண்டும்.
(4) செய்ந்நன்றி மறக்கமால் வாழ்வது மிகவும் முக்கியமாகும்.

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

இவ்வாறாக, இரண்டு காபோவைதரேற்றக்களின் பிரசன்னத்தின் அடிப்படையில் நபர் ஒருவரின் குருதிக்கூட்டம் பின்வரும் வகைகள் ஏதாவது ஒன்றாக இருக்கும்.
வகை A (காபோவைதரேற்று A காணப்படும்) வகை B (காபோவைதரேற்று B காணப்படும்) வகை AB (காபோவைதரேற்றுக்கள் A மற்றும் b காணப்படும்) அல்லது வகை O (இரண்டு காபோவைதரேற்றுக்களுள் எதுவும் காணப்படாது). வேவ்வேறு வகையான குருதிக்கூட்டங்களைக் கொண்ட நபர்களுக்கிடையே நிகழும் இனக் கலப்பின் விளைவாகத் தோன்றும் F1 மற்றும் F2 சந்ததிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 6.11. ABO குருதிக்கூட்டங்களுக்கான மடங்கு எதிருருக்கள்

மேலாட்சி (Epistatis)
மேலாட்சியானது வெவ்வேறு தானங்களின் பரம்பரையலகுகளுக்கிடையிலான இடைத்தாக்கத்தின் பெறுபேறாக நடைபெறும் தோற்றப்பாடு ஆகும். ஒரு தானத்தில் ஏற்படும் தோற்றவமைப்பு வெளிப்படுத்துதன்மையின் மாற்றமானது வேறு ஒரு தானத்திலுள்ள பரம்பரையலகின் தலையீட்டால் ஏற்படுத்தப்படும்.
பரம்பரையலகு இடைத்தாக்கத்தின் அடிப்படையில் மேலாட்சியானது ஆட்சியான மேலாட்சி (Dominant epistasis) மற்றும் பின்னடைவான மேலாட்சி (recessive epistasis) என வகைகளாகப் பிரிக்கப்படலாம். இது மெண்டலினது தத்துவங்களின் தோற்றவமைப்பு விகிதங்களில் ஓர் விலகலை ஏற்படுத்துகின்றது.

ஆட்சியான மேலாட்சி (Dominant epistasis)
குறித்தவொரு தானத்தில் உள்ள ஒரு ஆட்சியான எதிருரு, வெறொரு தானத்தில் உள்ள தனியான பரம்பரை அலகின் வெளிப்பாட்டை மாற்றுமாயின், அது ஆட்சியான மேலாட்சி எனக் குறிப்பிடப்படும். மேலாட்சியானது வீட்டுக்கோழிகளின் உடல் இறகு நிறத்தில் காணப்படுகின்றது. பின்வரும் பரிசோதனையைக் கருதுக.

அறியப்பட்ட ஒரு சமநுகத்துக்குரிய இரட்டை ஆட்சியுடைய வெள்ளைநிறக் கோழிக்கும், சமநுகத்துக்குரிய இரட்டைப் பின்னடைவானதொரு வெள்ளைநிறக் கோழிக்கும் இடையிலான ஒரு இனக்கலப்பு 100% F1 வெள்ளைநிற வழித்தோன்றலைக் கொடுக்கிறது. இந்த F1 தனியன்களுக்கிடையே நடைபெற்ற இனக்கலப்பில் உற்பத்திபண்ணப்பட்ட F2 சந்ததி, வெள்ளை மற்றும் நிறக்கோழிகளை 13:3 என்ற விகிதத்தில் கொண்டு காணப்படுகின்றது.

இந்த இரண்டு கோழிவகைகளின் நிறமானது தனித்தனியான இரண்டு பரம்பரையலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.
•பரம்பரையலகு ‘C’ / ‘c’ இறகுகளில் நிறத்தை உற்பத்திபண்ணுவதற்குப் பொறுப்பானது. ஆட்சியான ‘C’ எதிருரு நிறத்தை உற்பத்திபண்ணுகையில் பின்னடைவான ‘c’ நிறமூட்டல் காணப்படாத தன்மைக்குக் காரணமாகின்றது.
•‘I’ பரம்பரையலகு ‘C’ பரம்பரையலகிற்கு மேலாட்சியுள்ளதுடன் எதிருரு வெளிப்படுத்தப்படுதலை ஒடுக்குகிறது. ஆட்சியான ‘I’ எதிருரு நிறப்பொருட்’களின் உற்பத்தியைத் தடுக்கும் அதேவேளை பின்னடைவான ‘i’ எதிருரு நிறப்பொருட்கள் உற்பத்திபண்ணப்படுதலைத் தடுக்கமுடியாமல் உள்ளது.
இதன்பெறுபேறாக இரட்டை ஆட்சியுடைய சமநுகமுள்ள (CCII) வீட்டுக்கோழி வெள்ளை நிறமாக உள்ளது (ஆட்சியான I எதிருரு நிறந்தோன்றுவதைத் தடுக்கிறது) இரட்டை சமநுகமுள்ள பின்னிடைவான வீட்டுக்கோழி (ccii) வெள்ளைநிறமான உள்ளது (பின்னிடைவான c எதிருருவினால் நிறத்தை உண்டாக்க முடியவில்லை)

F1 சந்ததி யாவும் இதரநுகமுள்ள (CcIi) கோழிகளைக் கொண்டன. ஆட்சியுள்ள I எதிருருவின் நிரோதிக்கும் தன்மை காரணமாக எல்லா F1 சந்ததிகளும் வெள்ளையாக உள்ளன. இந்தக் கோழிகள் தம்மிடையே இனங்கலக்க விடப்பட்டபொழுது, நிரோதிக்குமியல்புடைய ‘I’ எதிருருவைக் காவும் F2 சந்ததிப் பிறப்புரிமையமைப்புகள் ஆட்சியான ‘C’ எதிருரு பிரசன்னமாக இருந்த போதிலும் வெள்ளை நிற இறகுகளைத் தோற்றுவிக்கின்றன. நிரோதிக்குமியல்புடைய I எதிருரு இல்லாத நிலையில் ஆட்சியான ‘C’ எதிருருவின் பிரசன்னம் நிறமுள்ள கோழிகளைத் தோற்றுவிக்கின்றது.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## ஹிஸ்புல்லாவிடம் கற்க............

அப்படி செய்கின்றார்கள்'. 'ஒரு நேர்சறிஸ்கூலை கூட கட்ட முடியாதவர்கள் பல்கலை கழகத்தை பற்றி கதைப்பது வேடிக்கையானது' என்கின்றார் அவர். இது ஏறக்குறைய நமது தமிழ் தலைமைகள் அனைவருக்கும் கச்சிதமாக பொருந்துகின்ற விமர்சனமாகும். இந்த விமர்சனத்திலிருந்து நாம் தொடங்க வேண்டிய பல கருமங்கள் உண்டு.

இந்தியா எமது நேச நாடு, அதிலும் தமிழகம் தொப்புள் கோடி உறவுகொண்டது. அங்கிருந்தெல்லாம் எவ்வளவோ உதவிகளை நமது தலைவர்களால் பெற முடியும், புலம்பெயர் தமிழர்களிடம் எத்தனை முதலீடுகளை பெற்று எமது மண்ணை வளமாக்கினோம்? வெளிநாட்டு தமிழர்கள் கொப்பி, பென் வாங்குவதற்கு கொடுக்கும் காசே பெரிதென்று நமது எம்பிக்கள் தவங்கிடக்கின்றனர். அதை சாதனையாக பிரசுரிக்க சில இணையத்தளங்கள் வேறு.

ஹிஸ்புல்லா போன்றோர் தமக்கு கிடைக்கின்ற அதிகாரங்களை ஒரு போதும் வீணடிப்பதில்லை. மக்கள் வழங்குகின்ற ஆணைகளை சரியான பேரம்பேசலுக்கு பயன்படுத்துவதில் வல்லவர்களாக இருக்கின்றனர். காத்தான்குடியை பார்த்து நமது மக்கள் இன்று பிரமிக்கின்றார்கள், சிலர் எரிச்சலைடைகின்றனர். வேறு சிலர் கோபப்படுகின்றனர், சிலருக்கு இந்த பேரீச்சை மரங்களும் இஸ்லாமிய அடையாளங்களும் அசூசையாக இருக்கின்றது. அதேவேளை இப்படியொரு தலைவன் கிடைத்ததில் பெருமைகொள்பவர்களாகவே ஏறக்குறைய எல்லா முஸ்லிம்களும் உள்ளார்கள். அவரது அரசியல் எதிரிகள் கூட அவரது சாதனைகளை குறைத்துப் பேசுவது கிடையாது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே இல்லாத அளவுக்கு மிகப்பெரிய இஸ்லாமிய நூதனசாலை ஒன்றை காத்தான்குடியில் அவர் கட்டியிருப்பது ஊரை விடுத்து சமூகம் சார்ந்த அவரது பார்வையை பறை சாற்றுகின்றது. இராவணன் ஆண்டான், எல்லாளன் ஆண்டான், குளக்கோட்டன் ஆண்டான், உலக நாச்சியார் ஆண்டாள் என்று அன்றிலிருந்து இன்றுவரை மார்புத்தட்டும் தமிழர்களின் வரலாறை கூறுவதற்கு இன்றுவரை கிழக்கில் ஒரு உருப்படியான நூதனசாலையில்லை என்பது வெட்கக்கேடானது.

கதிர்காமத்தில் மட்டுமல்ல கதிரவெளியிலும் வெல்லாவெளியிலும் கற்கால மனிதர்கள் வாழ்ந்த சான்றுகள் உண்டு. ஆனால் உலகப் புகழ் மிக்க இந்த வரலாறுகளை பேச நமது துறைசார் அறிஞர்களோ, அரசியல்வாதிகளோ எத்தனை ஆதாரங்களை ஒருங்கிணைத்து பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர்? எல்லோரும் சிங்களமயமாக்குகின்றான், சிங்கள மயமாக்குகின்றான் என்று சுட்டுவிரல் நீட்டுவதைத் தவிர தமிழையும் தமிழ் மண்ணையும் வளப்படுத்த துடியாய் துடிப்பவர்கள் யார்?

காத்தான்குடி வீதி இருவழிப்பாதையாக செப்பனிடப்பட்ட அதே காலத்தில்தான் திருமலை வீதியும் செப்பனிடப்பட்டது. ஆனால் அதனை நாம் அழகுபடுத்துவதிலும் பராமரிக்கின்றவிதத்திலும் ஏன் பின்னிக்கின்றோம். எழுவான் கரையையும் படுவான்கரையையும் இணைக்கின்ற மண்முனை பாலம் உல்லாச பயணிகளை கவர்ந்திழுக்க கூடிய ஓரிடமாகும். அதையிட்டு மேலதிக அழகுபடுத்தல்களை செய்வதற்கு எந்த அரசியல்வாதி ஒரு கணம் சிந்தனை செய்தான்? இந்த விடயத்தில் ஆரையம்பதி வீதி மட்டும் சற்று விதிவிலக்காக இருப்பது சிறியதொரு ஆறுதல். அங்கே எமது வரலாற்றை பறைசாற்றுகின்ற அழகு மிகு சிலைகள் எழுந்து நிற்பது மனதுக்கு ரம்மியமான உணர்வுகளை தருகின்றது.

சிங்கள குடியேற்றம் சிங்கள குடியேற்றம் என்று அறுபதாண்டு காலத்தை கடந்து விட்டோம். இப்போது முஸ்லீம் குடியேற்றம் முஸ்லீம் குடியேற்றம் என்று தொடங்கியுள்ளோம். இவற்றை பேசுவது கூடாதென்பதல்ல. இவற்றை பேசுவதும் அதைவைத்து வாக்கு வேட்டையாடுவதும் தொடர்கின்றதேயன்றி, நமது மண்ணை காக்க என்ன திட்டங்களை வகுத்தோம்? எத்தனை புதிய கிராமங்களை உருவாக்கினோம்? இன்று 'பொலன்நறுவையையும் ஒட்டமாவடியையும் இணைக்கின்ற பாதை பத்தோ இருபது வருடங்களுக்கு முன்னர் வெறும் கரிசல்காடாய் கிடந்தது. இன்று எத்தனையோ முஸ்லீம் கிராமங்களும் பள்ளிவாசல்களும் வந்து விட்டன.' என்று அண்மையில் ஒரு ஓய்வு பெற்ற அதிபர் என்னிடம் சொல்லி வெதும்பிக்கொண்டார்.

பறிபோகின்ற எல்லைக்கிராமங்களை பாதுகாக்க எத்தகைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்? யுத்தகாலங்களில் வெளியேறிய எல்லைக்கிராம மக்களை மீள குடியேற்ற இன்று எந்த தடையும் இல்லையே? அங்கு மீண்டும் திரும்பிச்சென்று வாழ முனையும் மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்த நமது தலைவர்கள் செய்த அபிவிருத்திகள் என்ன? ஆனால் முஸ்லீம் தலைமைகள் தமது மக்களுக்கு இத்தகைய விடயங்களில் சிறந்த வழிகாட்டுகின்றனர்.

அரசாங்கம் செய்வதில்லை, செய்வதில்லை என்று குறைப்பட்டு கொள்வதில் எந்த பிரயோசனமும் இல்லை. பாராளுமன்றத்தில் பிரேரணையை கொண்டு செல்லவேண்டும், அவற்றை முன்வைப்பதிலும் வாதபிரதிவாதங்களை நகர்த்தி செல்வதிலும் ஆதாரங்கள் புள்ளிவிபரங்கள் போன்றவற்றை எடுத்துச்சொல்வதிலும் திறமையை நிரூபிக்க வேண்டும். அதுமட்டும்மல்ல அமைச்சரவையில் நமது பிரசன்னம் முக்கியமானது, அங்கே நிறைவேற்றப்படும் முடிவுகள்தான் அனைத்துக்கும் ஆதாரம். அதை விடுத்து எதிர்ப்பு அரசியல்மட்டுமன்றி சரணாகதி அரசியலும் கவைக்குதவாததே. ஐம்பது வருடகாலம் எதிர்ப்பு அரசியல் செய்த தமிழர்களின் பிரதான தலைவர்கள் தற்போது சரணாகதி அரசியலுள் வீழ்ந்து கிடக்கின்றனர். ஆனால் முஸ்லீம் தலைவர்களோ மக்கள் சக்தியை வைத்து பேரம்பேசுகின்ற இணக்க அரசியலையே எக்காலத்திலும் முன்னெடுக்கின்றார்கள். அதிகாரத்தில் பங்கெடுக்கின்றனர். அதனால்தான் நமது மக்கள் முஸ்லீம் தலைவர்களை பார்த்து கொட்டாவி விடுகின்றனர்.

அன்று அஷ்ரப்பால் ஒரு தென் கிழக்கு பல்கலைக்கழகம், இன்று ஹிஸ்புல்லாவால் புனானை பல்கலைக்கழகம், அதேபோன்றுதான் தேவநாயகம் அதிகாரத்தில் பங்கெடுக்கும் அரசியலை செய்தமையால் ஒரு கிழக்கு பல்கலைக்கழகம், இராஜதுரை அமைச்சரானமையால்தான் எமக்கு ஒரு இசை நடனக்கல்லூரி, பிள்ளையான் முதலமைச்சரானதால்த்தான் மட்டக்களப்புக்கு ஒரு உருப்படியான பஸ் நிலையமும் வவுணதீவுக்கு ஒரு கல்வி வலயம் கிடைத்தது. ஆனால் அறுபது வருடகாலமாக தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக்கொண்டு தலைவர்கள் என்று மார் தட்டுபவர்களால் தமது சாதனையாக ஒரு செங்கல்லைத்தானும் காட்டமுடியாது போயுள்ளது.

தமது பதவி சுகங்களை தவிர வேறு எதற்குமே மக்கள் வழங்கும் ஆணைகளை பயன்படுத்தாது தமிழரசுக் கட்சியினர் வீணடித்து வருகின்றனர். அதற்கல்ல மக்கள் வாக்களிப்பது என்பதை ஹிஸ்புல்லாஹ்விடமிருந்து இவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். ஹிஸ்புல்லாவால் முடியுமென்றால் நம்மால் ஏன் முடியாது?

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் வறட்சி

செய்வதற்கான இணைப்புக்குழு ஆராய்ந்துள்ளது.

உன்னிச்சைக் குடிநீர்த்திட்டத்தின் மூலம் தற்போதைய நெருக்கடியான நிலையில் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தையும் பயிர்களுக்கான நீர்ப்பாசனத்தையும் எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் அங்கு ஆராயப்பட்டது.

அதேவேளை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மூலம் 26 லட்சம் ரூபாய் செலவில் முப்பதாயிரம் லீட்டர்கள் குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த வறட்சியால் 7723 ஏக்கர் நெல்வயலும் 629ஏக்கர் மேட்டு நிலப்பயிர்களும் 750 நன்னீர் மீனவர்களும் கால்நடைவளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் காட்டு நீர் நிலைகள் வற்றிவிட்டதால் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்னாயத்தங்களுக்கும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதால் தற்போது குளாய்களின் மூலம் விநியோகிக்கப்படும் நீரை குடிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்துமாறும் ஏனைய தேவைகளுக்கு கிணற்று நீரைப் பயன்படுத்துமாறும் பொதுமக்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுக்கிணறுகள் மற்றும் நீர் நிலைகளை சுத்தப்படுத்தி பொதுமக்கள் பாவனைக்கு உதவுமாறு தொண்டு நிறுவனங்களும் கிராம இளைஞர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

தேவைப்படும் பட்சத்தில் இராணுவத்தினரின் உதவியை நாடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்.......

மாட்டாது. கல்முனைத் தொகுதியிலே தமிழரசுக்கட்சியில் நிறுத்தப்படும் முஸ்லீம் வேட்பாளரை வெல்லப் பண்ணுவதற்காகத் தமிழரசுக்கட்சி முஸ்லீம் அரசியல்வாதிகளின் முகம் கோணாமல் நடந்து கொண்டது. அப்படியிருந்தும்கூட 1968 கல்முனைத் தொகுதி இடைத்தேர்தலில் மட்டுமல்ல அதன் பின்வந்த எத்தேர்தலிலும் தமிழரசுக்கட்சி நிறுத்திய முஸ்லீம் வேட்பாளர்களால் கல்முனைத் தொகுதியில் வெற்றியீட்ட முடியவில்லை.

1994ஆம் ஆண்டிலிருந்து 2018வரை சுமார் 25வருடங்கள் தொடர்ந்து முதலில் அலவி மௌலானா, பின்னர் அதாவுல்லா இறுதிக் காலத்தில் பைசர்முஸ்தபா என முஸ்லீம் அமைச்சர்களே உள்ளூராட்சிக்குப் பொறுப்பான விடய அமைச்சர்களாக இருந்து முஸ்லீம் சமூகத்திற்குத் தேவையானதைச் செய்து கொடுத்தார்கள். அது தவறல்ல. அது அவர்களது அரசியல் வல்லமை. ஆனால் அவர்களது அத்தகைய செயற்பாடுகளின்போது அப்போதைய தமிழர்விடுதலைக்கூட்டணியும் தற்போதைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பாராமுகமாக இருந்தன. யாழ்மேலாதிக்கக் குறுந்தமிழ்த்தேசியவாத அரசியல் தலைமைகளுக்குக் கிழக்குத் தமிழர்களின் மீது அக்கறையில்லாததே இதற்குக் காரணம். இந்தப் பின்னணியில் கல்முனை விவகாரத்தை நோக்கும் போது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் பேசிக் கல்முனைத் தமிழர்களுக்குச் சாதகமான தீர்வு எட்டப்படமாட்டாது. சேலை போய் முள்ளின்மீது விழுந்தாலும் சரிதான் முள்ளு வந்து சேலையிலே முட்டினாலும் சரிதான் சேதம் சேலைக்குத்தான். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லீம்காங்கிரஸின் தலைவர் றவூப்ஹக்கீமின் தோளிலே கைபோட்டாலும் சரிதான் அல்லது ஹக்கீம் சம்பந்தன் அவர்களின் காலிலே விழுந்தாலும் சரிதான் நட்டம் தமிழர் தரப்பிற்குத்தான்.

எனவே கல்முனைத் தமிழ்ச்சமூகம் இந்த விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நம்பியிருக்காமல் கல்முனைவடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விடயத்தைக் கல்முனைத் தமிழ்ச்சமூகம் தங்கள் கையில் எடுக்கவேண்டும். இந்த விடயத்தில் 'அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கம்' கல்முனைத் தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தவும் நெறிப்படுத்தவும் முன்வர வேண்டும்.

AGNI PULAYAVELY INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa